
# சடாட்சர கானம்



## அமரர். உயர்திரு. முருகேசு சடாட்சரம்

ஓய்வுபெற்ற உதவிக்கல்விப்பணிப்பாளர்

கலாபூசணம், கலைக்குருசில், மகரந்தச்சிறகு, கலைச்செல்வர், வித்தகர், கலைமாமணி

# 31 ஆம் நாள் நினைவுமலர்

பெரியநீலாவணை, கல்முனை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 31ம் நாள் நினைவுமலர்

**06.08.2024**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

கண் மலர்வு

06 - 05 - 1940

கண் அயர்வு

06 - 07 - 2024



கலாபூசணம், கலைமாமணி, வித்தகர், கலைக்குருசில்
மகரந்தச்சிறகு, கவிஞர், கலைச்செல்வர்

# அமரர். முருகேசு சடாட்சரம்

ஓய்வுபெற்ற உதவிக்கல்விப்பணிப்பாளர்

## திதி வெண்பா

அருள் நிறைந்த குரோதி வருட ஆடி வளர்மதி
பிரதமை தனில் மனு தழைக்கும் மந்தன் வாரம் தனில்
அறம் பொழி சேர் துதியை திதிதனில்
குலம் விளங்க வைத்த எங்கள் தந்தை ஈசனடி சேர்ந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# சமர்ப்பணம்

அன்பின் இலக்கணமாய்
அமைதியின் இருப்பிடமாக
கண்டிப்பின் இரகசியமாக
அன்பாய் எமை அரவணைத்து
அவனியில் வாழ்ந்து கஸ்ரங்களை மறந்து
கவிகள் பல புனைந்து அறுபத்து நான்கையும்
தன்னகத்தே கொண்ட - உமை
அறியார் பாரினில் உண்டோ
பண்புடைமை காத்து பக்குவமாய் வழிநடந்தி
குறைகள் இன்றி கல்வி புகட்டி
பட்டம் பெற்று பதவி பெற
பகல் இரவாய் பாடுபட்டீர்
நல்லவராய் நாணயமாக
நீதி நேர்மை வழியில் நீயும் நடந்தீர்
காலனவன் தன் கணக்கை சாலவே செய்ய
கவர்ந்தானே உங்கள் உயிரை அன்று
கண்ணீர் விட்டு வரைகின்றோம் - உன்
நினைவுகளை
எம் உள்ளத்தில் வீற்றிருக்கும் அன்புத் தெய்வத்தின்
பாதகமலத்தில் **"சடாட்சர கானம்"** எனும்
நினைவு மலரை சமர்ப்பணம் செய்கின்றோம்
இன்று.

பிரிவால் துயருறும்
**- குடும்பத்தினர் -**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



PUBLIC LIBRARY
MARUTHAMUNAI
MUNICIPAL COUNCIL
KALMUNAI

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்சபுராணம்



UBLIC LIBRARY
MARUTHAMUNAI
MUNICIPAL COUNCIL
KALMUNAI

## பிள்ளையார் காப்பு

திருச்சிற்றம்பலம்

மூஷிக வாஹன மோதக ஹஸ்தே!
சாமர கர்ண விளம்பித ஸூத்ர !
வாமன ரூப மகேஸ்வர புத்ர!
விக்ன விநாயக பாத நமஸ்தே!

## தேவாரம்

கூற்றாயின வாறுவி லக்ககிலீர்
கொடுமைபல செய்தன நானறியேன்
ஏற்றாயடிக் கேஇர வும்பகலும்
பிரியாது வணங்குவன் எப்பொழுதும்
தோற்றாதென் வயிற்றின் அகம்படியே
குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேன் அடியேன்அதி கைக்கெடில
வீரட்டா னத்துறை அம்மானே..

## திருவாசகம்

முத்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி அறிவித்துப் பழவினைகள் பாறும்வண்ணம்
சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனைஆண்ட
அத்தனெனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே !
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே !
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே !
சித்தத்துள் தித்திக்கும் தேனே !
அளிவளர் உள்ளத்(து) ஆனந்தக் கனியே !
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

## திருப்பல்லாண்டு

ஆரார் வந்தார் அமரர்
குழாத்தில் அணியுடை ஆதிரைநாள்
நாராயணனொடு நான்முகன்
அங்கி இரவியும் இந்திரனும்
தேரார் வீதியில் தேவர் குழாங்கள்
திசையனைத்தும் நிறைந்து
பாரார் தொல்புகழ் பாடியும்
ஆடியும் பல்லாண்டு கூறுதுமே

## பெரியபுராணம்

வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறைவிளங்கப்
பூதபரம் பரைபொலியப் புனிதவாய் மலர்ந்தழுத
சீதவள வயற்புகலித் திருஞான சம்பந்தர்
பாதமலர் தலைக்கொண்டு திருத்தொண்டு பரவுவாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்புகழ்

கைத்தல நிறை கனி அப்பமொடு அவல் பொரி
கப்பிய கரி முகன் அடி பேணி
கற்றிடும் அடியவர் புத்தியில் உறைபவ
கற்பகம் என வினை கடிது ஏகும்
மத்தமும் மதியமும் வைத்திடும் அரன் மகன்
மல் பொரு திரள் புய மத யானை
மத்தள வயிறனை உத்தமி புதல்வனை
மட்டு அவிழ் மலர் கொடு பணிவேனே
முத்தமிழ் அடைவினை முற்படு கிரிதனில்
முற்பட எழுதிய முதல்வோனே
முப்புரம் எரி செய்த அ சிவன் உறை ரதம்
அச்சு அது பொடி செய்த அதி தீரா
அத்துயர் அது கொடு சுப்பிரமணி படும்
அப்புனம் அதனிடை இபம் ஆகி
அக்குறமகளுடன் அச்சிறு முருகனை
அக்கணம் மணம் அருள் பெருமாளே

# வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக வுலக மெல்லாம்.

திருச்சிற்றம்பலம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குமரஸ்துவம்

ஓம் ஷண்முக பதயே நமோ நமஹ!
ஓம் ஷண்மத பதயே நமோ நமஹ!
ஓம் ஷட்கிரீவ பதயே நமோ நமஹ!
ஓம் ஷட்கிரீட பதயே நமோ நமஹ!
ஓம் ஷட்கோண பதயே நமோ நமஹ!
ஓம் ஷட்கோஷ பதயே நமோ நமஹ!
ஓம் நவநிதி பதயே நமோ நமஹ!
ஓம் சுபநிதி பதயே நமோ நமஹ!
ஓம் நரபதி பதயே நமோ நமஹ!
ஓம் சுரபதி பதயே நமோ நமஹ!
ஓம் நடச்சிவ பதயே நமோ நமஹ!
ஓம் ஷடக்ஷர பதயே நமோ நமஹ!
ஓம் கவிராஜ பதயே நமோ நமஹ!
ஓம் தபராஜ பதயே நமோ நமஹ!
ஓம் இகபர பதயே நமோ நமஹ!
ஓம் புகழ் முனி பதயே நமோ நமஹ!
ஓம் ஜயஜய பதயே நமோ நமஹ!
ஓம் நயநய பதயே நமோ நமஹ!
ஓம் மஞ்சுள பதயே நமோ நமஹ!
ஓம் குஞ்சரீ பதயே நமோ நமஹ!
ஓம் வல்லீ பதயே நமோ நமஹ!
ஓம் மல்ல பதயே நமோ நமஹ!
ஓம் அஸ்த்ர பதயே நமோ நமஹ!
ஓம் சஸ்த்ர பதயே நமோ நமஹ!
ஓம் ஷஷ்டி பதயே நமோ நமஹ!
ஓம் இஷ்டி பதயே நமோ நமஹ!
ஓம் அபேத பதயே நமோ நமஹ!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் ஸுபோத பதயே நமோ நமஹ!
ஓம் வியூஹ பதயே நமோ நமஹ!
ஓம் மயூர பதயே நமோ நமஹ!
ஓம் பூத பதயே நமோ நமஹ!
ஓம் வேத பதயே நமோ நமஹ!
ஓம் புராண பதயே நமோ நமஹ!
ஓம் பிராண பதயே நமோ நமஹ!
ஓம் பக்த பதயே நமோ நமஹ!
ஓம் முக்த பதயே நமோ நமஹ!
ஓம் அகார பதயே நமோ நமஹ!
ஓம் உகார பதயே நமோ நமஹ!
ஓம் மகார பதயே நமோ நமஹ!
ஓம் விகாச பதயே நமோ நமஹ!
ஓம் ஆதி பதயே நமோ நமஹ!
ஓம் பூதி பதயே நமோ நமஹ!
ஓம் அமார பதயே நமோ நமஹ!
ஓம் குமார பதயே நமோ நமஹ!

ஸ்ரீ குமாரஸ்தவம் முற்றிற்று.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மு. சடாட்சரன் சரிதம்

மீன்பாடும் தேனாட்டிற்குத் தெற்கே கல்வியூராம் கல்முனை மாநகரம் அழகிய நீலக்கடல் வளமும், கண்ணைப்பறிக்கும் பசுமை கொண்ட வயல்வளமும் புடைசூழ்ந்த கிழக்கில் சிலம்பரசி கடற்கரைக் கண்ணகி அம்மனும், மேற்கில் விக்கினங்களைத்தீர்க்கும் தரவையம்பதி சித்தி விநாயகர் ஆலங்களும் புடைசூழ, தரவை சித்திவிநாயகர் வீதி கல்வி புகழ்பாடும் கல்முனை மூன்றில் முருகேசு கனகம்மா தம்பதிகளுக்கு **1940.05.06** இல் மகனாக அவதரித்தார் அமரர். முருகேசு சடாட்சரம்.

இவருக்கு மூன்று சகோதரிகள் குணரத்திணம், மரகதம், செல்வநாயகி. இவர்களது தந்தை கல்லோயா குடியேற்றத் திட்டத்தில் வேலை செய்தவர். குடும்பச் சுமையோ தந்தையின் கையிலே காணப்பட்டது.

முருகேசு கனகம்மா பெற்ற தாய் தந்தையாக காணப்பட்ட போதிலும் இவரது வளர்ப்புத் தாயாகவும் தந்தையாகவும் சின்னத்தம்பி மாரிமுத்து காணப்பட்டனர். வளர்ப்புத் தாய் பார்வை இழந்தவராக இருந்த போதிலும் தனது மகன்மீது அதிக பற்றும் பாசமும் கொண்டவர். இவரது ஊக்குவிப்பு தான் மகனின் உயர்வுக்குக்கு காரணம் எனலாம்.

கல்முனை விவேகானந்த வித்தியாலயம், கமு / இராமகிருஸ்ணமிஷன் ஆகிய பாடசாலைகளில் தனது கல்வியை மேற்கொண்டவர். சனிக்கிழமை என்று தெரியாமல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதே நாளில் பாடசாலைக்குச் சென்று வெட்கத்தில் மேலாடையை களற்றி புத்தகங்களுடன் மடித்து வீடு வந்ததும் வழமை. இதேவளை தாயார் சந்தைகோ அல்லது கடைகளுக்கோ பொருட்களை கொள்வனவு செய்வதற்கு பணத்தை கொடுத்து அனுப்பும் போது அவற்றை வேண்டாமல் கதை, கவிதைப்புத்தகங்களை தேடி அலைந்து பெற்றுக் கொண்டு வீடுவந்ததும் அம்மாவின் கண்டனத்திற்கு உட்படுவதும் வழமை.

தரவை சித்தி விநாயகர் ஆலய வீதியை பிறப்பிடமாகக் கொண்டு இருந்த எங்கள் அண்ணனுக்கு சகோதரிகள் மூவர். குணரத்தினம், மரகதம், செல்வநாயகி என்போர். அண்ணா பாடசாலையில் மேல் வகுப்புக்களில் படிக்கும்போது மாணவர் மன்றத்தில் பேசுவதிலும் நடிப்பதிலும் முன்னனியில் திகழ்ந்தார். 19 வயதில் கவிதை எழுதத்தொடங்கினார். 1959 இல் "பாரதி யார்?" என்னும் இவர் கவிதை சுகந்திரனில் பிரசுரமானது. அன்றிலிருந்து மரணிக்கும் வரை எழுதிக்கொண்டே இருந்தார். 19 வயதில் மட்டக்களப்பு ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் சேர்ந்த இவர் அங்கு 2 வருடம் பயிற்சி பெறும்போது இவரின் தமிழ்க்கலை, இலக்கியப்புலமை மேலோங்கியது. கலாசாலை "பாமலர் மாலை" சஞ்சிகையின் ஆசியரியராகவும், முத்தமிழ் மன்றச் செயலாளராகவும் தெரிவாகி சிறப்பாகச் செயற்பட்டார். 1960 இல் பயிற்சியை முடித்து வெளியேறினார்.

1961 இல் நீலாவணன் தலைமையில் நுஃமான், மருதூர்க்கொத்தன் ஆகியோருடன் இணைந்து கல்முனை எழுத்தாளர் சங்கத்தை அமைத்தார். இதன் மூலம் கலை, இலக்கிய சேவைகள் புரிய பலவருடம் ஒத்துழைத்தார். இச்சங்கம் அரங்கேற்றிய நீலாவணனின் "மழைக்கை" எனும் கவிதை நாடகத்தில் முக்கிய பாத்திரமாக நடித்து பலரது பாராட்டையும் பெற்றார். தமிழ் இலக்கிய கழகத்தின் செயலாளராகவும் இருந்து நீலாவணன் ஆசிரியராகவும் இருந்து "பாடுமீன்" இலக்கிய சஞ்சிகை வெளிவர அயராது உழைத்தார். இப்பத்திரிகையில் இவரது "பிடிப்பு" எனும் முதல் சிறுகதையும் பிரசுரமானது.

PUBLIC LIBRARY
MARUTHAMUNAI
MUNICIPAL COUNCIL
KALMUNAI



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வேளையில் தான் 1968 இல் பிரசித்தி பெற்ற வைத்தியர் நாகமணி பரிகாரியின் பேத்தியாகிய நல்லதம்பி பாக்கியத்தை திருமணம் செய்து கொண்டார். இவர்களது திருமணம் மேளதாள வாத்தியத்துடன் மிகவும் பிரபல்யமாக இடம்பெற்றது. இல்லறவாழ்கை இனிதாக போய்க் கொண்டிருந்த போது 7 குழந்தைகளுக்கு தந்தையானார். பார்த்தீபன், காலம்சென்ற நவீனன், மற்றும் கீர்த்தினி, தமிழழகி, நவநிதி, வித்தியானி, திருமகள். தனது பிள்ளைகளுக்கு சிறந்த வழிகாட்டியாகவும், பிள்ளைகளுக்கு சிறந்த பாதுகாப்பாளராகவும் இருந்து செயற்பட்டவர். பிள்ளைகள் ஒவ்வொரு துறைகளில் முன்னேற்றமடைய அயராது உழைத்தவர்.

மூத்த சகோதரி தனது திருமணத்தின் பின்னர் பெரியநீலாவணையில் வசித்து வந்தவேளை, இவரது இளைய சகோதரிகளும் அவரைபின் தொடர்ந்தனர். சகோதரியையும் தனது தாய்மாரையும் பிரிந்து தனிமையில் இருந்து சோகத்தில் வாடிய இவருக்கு தங்கைமார்களுக்கு பக்கத்தில் இருக்கும் நிலை உருவாகியது. 1981 காலகட்டத்தில் பெரிய நீலாவணையை தங்கைமாருடன் இணைந்து வசிப்பிடமாக்கிக்கொண்டார்.

எங்கள் சகோதரரினால் "மேட்டுநிலம்", "பாதைபுதிது" எனும் இருநூல்கள் வெளியிடப்பட்டுள்ளன. இவை பலரது பாராட்டையும் பெற்றுள்ளது. 2009 இல் வெளியிடப்பட்ட "மேட்டு நிலம்" கிழக்கு மாகாணபண்பாட்டலுவல்கள் அமைச்சின் இலக்கிய நூல் விருதையும் பெற்றார்.

மேடைப் பேச்சிலும் வல்லவரான இவர் பல இலக்கியக் கூட்டங்களில் தனது விமர்சனக் கருத்துக்களையும் வெளியிட்டுள்ளார். பல கவியரங்குகளில் பங்குபற்றி கவியரங்குகளுக்கு தலைமை தாங்கி நடாத்தியுள்ளார். நாடகங்கள், மெல்லிசைப்பாடல்கள் போன்றவற்றையும் எழுதியுள்ளார்.

கிழக்கிலங்கையில் புகழ்பூத்த கவிஞரான இவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைச்செல்வர், மகரந்தச்சிறகு, கலாபூசணம், கலைக்குருசில், இலக்கிய வித்தகர் எனும் பல பட்டங்களுக்குச் சொந்தக்காரனகத் திகழ்ந்தும் தன்னடக்கம் மிக்கவராக வாழ்ந்த பெருமனிதன்.

எங்கள் சகோதரன் கல்வி, கலை, இலக்கிய சமூகப் பணிகளில் மிகுந்த ஈடுபாடுடையவர். எழுதுவினைஞராக, ஆசிரியராக, பிரதி அதிபராக, அதிபராக, உதவிக்கல்விப் பணிப்பாளராக எம் பிரதேசத்துக்குக் கல்விப் பணியாற்றியுள்ளார்.

எங்கள் சகோதரன் இலக்கிய உலகிற்கு மட்டுமல்லாமல் தனது குடும்பம், சகோதரிகளது குடும்பம், பிள்ளைகள், மருமக்கள், மைத்துனர்மார்கள், பேரக்குழந்தைகள் போன்றோரிடம் அன்பாகவும், பண்பாகவும், பழகுவதில் படுசுட்டி தனது இறுதி மூச்சுவரை தனது வீட்டில் இருக்கும் "புத்தகப் பூங்கா வனத்தை" கட்டிக்காத்தவர்.

எங்கள் சகோதரன் நோய்வாய்ப்பட்டு இருந்த போதும் கூட முச்சக்கரவண்டியில் தடியுடன் வந்து எங்களைப் பார்வையிட்டுச் செல்வது வழமை. அவ்வாறு இல்லாவிட்டால் தொலைபேசி மூலமும் தொடர்பு கொண்டு எங்கள் சுகதுக்கங்களை விசாரிப்பார். எனவேதான் அவரின் இறுதி மூச்சும் கதிர்காமம் சென்ற மருமக்களுக்காக காத்துக்கொண்டு இருந்ததை நாம் அறிவோம்.

எங்கள் அண்ணன் "நீலையம்பதி" எனும் "நீலையூர்" பெரிய நீலாவணையில் திடிர் மரணம் அடைந்தது எங்கள் அனைவரையும் மீளாத்துயரில் ஆழ்த்திவிட்டது. அவர் மறைந்தாலும் எண்ணங்கள் நீங்கா நினைவுகளாக நிலைத்து இருக்கும் - அண்ணா உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிராத்திக்கிறோம்.

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!

உன் பிரிவால் துயருறும் சகோதரிகள்
**குணரெத்தினம், மரகதம், செல்வநாயகி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மு. சடாட்சரனும் கலையும்

1940 ஆண்டு வைகாசி மாதம் 06 ஆம் திகதி கல்முனையில் பிறந்த முருகேசு சடாட்சரன் பெரியநீலாவணையில் வாழ்ந்து கொண்டிருந்தவர்.

இவர் பாடசாலையில் மேல் வகுப்புகளில் படிக்கும் போதே மாணவர் மன்றத்தில் பேசுவதிலும், நடிப்பதிலும் முன்னணியில் விளங்கினார். பத்தொன்பது வயதில் கவிதை எழுதத்தொடங்கினார். 1959 இல் "பாரதியார் ?" என்னும் இவர் எழுதிய கவிதை சுதந்திரனில் பிரசுரமானது. அன்றிலிருந்து தன் இறுதிக்காலம் வரை எழுதிக்கொண்டிருக்கும் எழுத்தாளர் ஆனார். 19 ஆவது வயதில் மட்டக்களப்பு ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் சேர்ந்தார். அங்கு இருவருடம் பயிற்சி பெறும் போது இவரின் தமிழ்கலை இலக்கியப்புலமை மேலோங்கியது. அக்கலாசாலையின் " பாமலர்மாலை " சஞ்சிகையின் ஆசிரியராகவும் முத்தமிழ் மன்றச் செயலாளராகவும் தெரிவாகி சிறப்புறச்செயற்பட்டார். 1960 இல் கலாசாலையில் இருந்து பயிற்சியை முடித்து வெளியேறினார். 1961 இல் நீலாவணன் தலைமையில் மருதூர்க்கொந்தன், நுஃமான் ஆகியோரோடு சேர்ந்து கல்முனை எழுத்தாளர் சங்கத்தை அமைத்து கலை இலக்கிய சேவைகளை புரிய பல வருடங்கள் ஒத்துழைத்தார். இச்சங்கம் அரங்கேற்றிய நீலாவணனின் மழைக்கை கவிதை நாடகத்தில் முக்கியபாத்திரத்தில் நடித்து பலரது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாராட்டையும் பெற்றார். அதன் பின் தமிழ் இலக்கியக் கழகத்தின் செயலாளராக இருந்து 1967இல் நீலாவணன் அவர்களை ஆசிரியராககொண்டு "பாடுமீன்" இலக்கிய சஞ்சிகை வெளியிட அயராது உழைத்தார். இப் பத்திரிகையில் இவரின் "பிடிப்பு" என்னும் முதல் சிறுகதை பிரசுரமானது.

2009 இல் புரவலர் புத்தகப் பூங்காவினால் வெளியிடப் பட்ட "மேட்டுநிலம்" என்னும் இவரின் சிறுகதைநூல் பலரது பாராட்டையும் பெற்றதோடு, கிழக்குமாகாண கல்விபண்பாட்டலுவல்கள் அமைச்சின் இலக்கிய நூல் விருதையும் பெற்றது.

மேடைப்பேச்சிலும் வல்லவரான இவர் பல இலக்கியக் கூட்டங்களில் தனது விமர்சனக்கருத்துக்களையும் முன் வைத்துள்ளார். பல கவியரங்குகளில் பங்குபற்றிய இவர் கவியரங்குகளைத் தலைமைதாங்கி நடத்தியுள்ளார். இவரின் மெல்லிசைப்பாடல்கள் எழுபதுகளில் இலங்கை வானொலியில் ஒலிபரப்பாகி பலரைக்கவர்ந்துள்ளன. நாடகத்துறையில் அக்கறை காட்டிய இவர் பல நாடகங்களை எழுதித் தயாரித்து மேடையேற்றி உள்ளார். திரௌபதி அம்மன் ஆலயத்தில் இவர் நடித்த "புசாரி புதிது" என்னும் நாடகம் பலராலும் பேசப்பட்டு பாராட்டுக்குள்ளானது.

முத்தமிழும் கைதேர்ந்த இவருக்கு பல அமைப்புக்கள் கலைச்செல்வர், கலாபூசணம், கலைக்குருசில், இலக்கிய வித்தகர், மகரந்தச்சிறகு எனும் பட்டங்கள் வழங்கியது மட்டுமின்றி இவரை பல அமைப்புக்களால் பாராட்டி கௌரவித்தமை இவரது திறமைக்கு சான்று பகிர்கின்றது.

எழுதுவினைஞர், பயிற்றப்பட்ட ஆசிரியர், அதிபர், உதவிக்கல்விப் பணிப்பாளர் என பல சேவைகளையும் புரிந்த இவரது வாழ்க்கை ஏனையவர்களுக்கு ஒரு வழிகாட்டல் என்றால் அது மிகையாகாது.

**கலாபூசணம் கா. சந்திரலிங்கம்**
ஓய்வு நிலை அதிபர். சேனைக்குடியிறுப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மெல்லிசைப்பாடல் – 1

## நித்திரையில்...

நித்திரையில் தோன்றும் நித்திலமே வாராய்
சத்தியமாய் உன்நினைவால்
சாகிரேன் பாராய்....

(நித்திரையில்)

நித்தமுமென் நெஞ்சில்
நினறு மணம் வீசும்
புத்தம் புது றோசா
புன்னகைத்து வாராய்

(நித்திரையில்)

புத்தகத்தை விரிப்பேன்
பூப்போல சிரிப்பாய்
பக்தியோடு துதிப்பேன்
பால் நிலவாய் விழிப்பாய்

(நித்திரையில்)

இத்தரையின் இன்பமெல்லாம்
எனக்கள்ளித் தருவாய்
முத்தமிழே முறுவலுடன்
அன்பு சொறி வாழ்வேன்

(நித்திரையில்)

இது மகரந்தச்சிறகால் எழுதப்பட்டு இலங்கை வானொலியில் ஒலிபரப்பான மெல்லிசைப்பாடல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனைவியின் உளக்குமுறல்...

நினைத்து பார்க்கிறேன் அப்பா நீங்காத நினைவுகளை. வள்ளுவன் வாசுகியாக ஐம்பத்தைந்து வருட இல்லற வாழ்க்ககையில் நாம் இருவர் நமக்கு எழுவர் என ஏழ்மையான வாழ்வுதனில் ஏற்றங்கள் பல கண்டு வாழ்ந்தோம்.

நாங்கள் இருவரும் ஒருவரை ஒருவர் விட்டு ஒருநாளும் பிரிந்தது இல்லை. ஏழ்மையான வாழ்க்கை தான் என் கணவரின் ரகசியம் அமைதியானவர், அன்பானவர், யாருடனும் சண்டை பிடிப்பதும் இல்லை, சத்தமாக கதைப்பதுமில்லை. உண்மை பேசி உத்தமராக உயர்ந்தவர். அர்ச்சுனனாக கர்ணனாக வாழ்ந்தவர்.

என்னப்பா உங்கள் வாழ்க்கையைப் பார்க்கும்போது ரஜனியின் பாட்ஷா படம் தான் நினைவில் வருகின்றது. ஆறாம் திகதியில் பிறந்து ஆறாம் திகதியில் இறைபதம் அடைந்த உங்களுக்கும் பிள்ளைகளோ ஆறு உங்கள் அந்தியேட்டியும் ஆறில் தான் வருகின்றது. உங்கள் பெயரும் ஆறு எழுத்து மந்திரம்தான். நினைத்துப்பார்க்கவில்லை அதிசயப்பிறவிதான் நீங்கள்.

எமது பிள்ளைகள் அறுவரையும் கண்ணை இமைகாப்பது போல காத்துவந்தீர்கள். அல்லும் பகலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களுக்கே உழைத்தீர்கள். அவர்களின் முன்னேற்றத்திற்கு உங்கள் பங்களிப்பு அளப்பரியது. மூத்தமகளை வவுனியா கல்வியற்கல்லூரி முடித்து பட்டப்பின் கல்வி டிப்ளோமா வரை அழைத்து சென்றீர்கள். இளையமகளை வவுனியா விவசாயக் கல்லூரி முடித்து தாதியர் சேவைக்கு உட்படுத்தினீர்கள். இரண்டாவது மகளினையும் நான்காவது மகளினையும் அவர்களின் தொழில் தொடர்பாக நேர்முகப்பரீட்சைகளுக்கு அழைத்துச் சென்றும் வந்தீர்கள். நீங்கள் முயற்சிசெய்து இருந்திருந்தால் அரச தொழில் அவர்களுக்கு கிடைத்திருக்கும். இத்தனைக்கும் காரணம் யாரிடமும் அடிபணியாதகுணம், கெஞ்சாதகுணமும்தான்.

எனக்கோ வங்கியோ, கடையோ, சந்தையோ தெரியாது, இப்போது நானும் அவற்றை தேடி அலையவேண்டும். கஸ்ரத்தை பிள்ளைகளிடம் காட்டாது வாழ்ந்தநீங்கள், தனிமையில் சீமேந்துக் கல்வெட்டி தனிவீடு கட்டினீர்கள். அதில் தான் உங்கள் இறுதி கிரியையும் இடம்பெற்றது.

எமது பிள்ளைகளின் ஒவ்வொரு சந்தர்பத்திலும் ஆலவிருட்சமாக இருந்து அவர்களின் உயற்சிக்கு வழிகாட்டி உத்தமராக வாழ்ந்த உங்களை எப்படி மறப்பது. உங்களின் ஆத்துமா சாந்தியடைய பிராத்திக்கின்றேன்.



ஆறாவடுவுடன்
**அன்பு மனைவி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது நினைவுகளில்...

கலாபூசணம், கலைமாணி, கலைக்குருசில், விதத்தகர் அமரர் மு. சடாட்சரம் அவர்கள்.

06.07.2024 அன்று இறைபதம் எய்திய அமரர். மு. சடாட்சரம் அவர்களின் நினைவுமலருக்கு அவர்பற்றிய எனது நினைவலைகளைப் பகிர்ந்து பெரு மகிழ்ச்சியடைகிறேன்.

அன்னார் தனது ஆரம்பக் கல்வியினை கல்முனைப் பகுதியில் முடித்துவிட்டு 1959 ஆம் ஆண்டு மட்டக்களப்பு அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் பயின்று ஆசிரியரானார். 1964 ஆம் ஆண்டில் இரத்தினபுரி மாவட்டத்தில் "பறக்கடுவ" எனும் கிராமத்தில் தனது முதல் நியமனத்தை பெற்று ஆசிரியராக தனது கடமையை ஆரம்பித்தார். அதனைத்தொடர்ந்து நமது பகுதிக்கு மாற்றலாகி வந்து றாணமடு, கல்முனை R.K.M வித்தியாலயம் ஆகிய சில பாடசாலைகளில் ஆசிரியராக கடமை புரிந்தார்.

1975ஆம் ஆண்டு அதிபர் பரீட்சையில் சித்தியடைந்து பின் சவளக்கடை 7ம் கிராமம் கணேஷா வித்தியாலயம், நாவிதன்வெளி வித்தியாலயம், பெரியநீலாவணை சரஸ்வதி வித்தியாலயம், பாண்டிருப்பு இந்து மகா வித்தியாலயம், கல்முனை விவேகானந்த வித்தியாலயம், ஆகிய பாடசாலைகளில் அதிபராக கடமைபுரிந்தார். 1990 நடைபெற்ற இலங்கை கல்வி நிருவாக சேவை பரீட்சையில் சித்தியெய்தியதை தொடர்ந்து 1990 ஆம் ஆண்டு முதல் 2000



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆம் ஆண்டு வரை உதவி கல்விப்பணிப்பாளராக கடமை ஆற்றினார்.

அன்னார் கவிஞர்களான நீலாவணன், பேராசிரியர் நூஃமான், பாண்டியூரான், சண்முகம், சிவலிங்கம், ஜீவா ஜீவரெத்திணம், மருதூர்கனி, மருதூர் கொத்தன் போன்றவர்களுடன் இணைந்து தனது ஆசிரியர் சேவைக்கு புறம்பாக கவிதைகள், நாடகங்கள் மற்றும் தமிழ் கலாசார நிகழ்வுகளிலும் பங்காற்றினார். அதன் பலனாக சிறந்த தமிழ்க் கவிஞராக இலங்கை நாட்டின் பிரபல கவிஞர்களுடன் முத்திரை பதித்தார். இதன் காரணமாக கலாபூசணம், கலைமாமணி, கலைகுருசில், வித்தகர் ஆகிய பட்டங்களை தன்வசமாக்கி கொண்டார்.

*1972* இல் அன்னாரது பாசமிகு இளைய சகோதரியை நான் திருமணம் செய்து கொண்டமையினால் எனது நெருங்கிய உறவுக்காரரானார். பழகுவதற்கு மிகவும் எளிமையானவர், கல்வி உலகிற்கு மிகவும் பாரிய அர்ப்பணிப்புக்களை செய்துள்ளார். மேலும் இவருடைய நற்பண்புகளைப் பாராட்டி நீலையூர் சுதாவினால் *15.10.2022* இல் "கிடுகு வீடு" நூல் வெளியீட்டின் போது "வாழும்போதே வாழ்த்துவோம்" சாதனையாளர் விருதினை வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

இவ்வாறான நற்ப்பண்புகளையும் பெருமையினையும் கொண்ட ஒரு தமிழ் ஆசானை ,தமிழ் ஆளுமையை அன்னாரது 84வது வயது பூர்த்தியான காலத்தில் இறைவன் அழைத்துக் கொண்டான். அன்னாரது ஆத்மா சுவர்க்கம் சென்றடைய வேண்டி எல்லாம் வல்ல இறைவனை பிராத்திப்பதோடு அன்னாரது குடும்பத்தாருக்கும் ஆழ்ந்த இரங்கலைத் தெவிரித்துக் கொள்கின்றேன்.

- நன்றி -

இவ்வண்ணம்

அன்புடன் மைத்துனர் **கந்தையா மகாலிங்கம்**

**Rtd Sri Lanka Foreign Service (SLFS)**

பெரிய நீலாவணை - *01.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நண்பர் மு. சடாட்சரனுக்கு உற்றநண்பர் நுஃமானின் நினைவுகள்...

நண்பர் சடாட்சரனின் மறைவு தனிப்பட்ட முறையில் எனக்கு ஒரு பேரிழப்பு. அவர் எனது நீண்டகால நண்பர். 1960களின் தொடக்கத்தில் முளைவிட்டு வளர்ந்த நட்பு. அறுபது ஆண்டுகளைத் தாண்டிய நட்பு அது. வெறும் இலக்கிய நட்பு மட்டுமல்ல அது. ஆத்மார்த்த நட்பு.

நண்பர் சடாட்சரனை 1960ல் அல்லது 61ல் முதல்முதல் சந்தித்தேன். அவர் மட்டக்களப்பு ஆசிரிய கலாசாலையில் பயிற்சி முடித்து பணிக்காகக் காத்திருந்தார் என்று நினைக்கிறேன். அப்போது நாங்கள் இளைஞர்கள். இலக்கிய ஆர்வம் துளிர்த்த காலம். அந்தக் காலத்தில் நாங்கள் தினமும் அல்லது வாரத்தில் இரண்டு மூன்று நாட்களாவது சந்திப்போம். பெரும்பாலும் நீலாவணன் வீட்டில், நீலாவணைக் கடற்கரையில், அல்லது கல்முனைக் கடற்கரையில் அல்லது எங்கள் வீடுகளில் சந்திப்பு நிகழும்.

1963ல் கொள்ளுப்பிட்டி பகத்தல வீதியில் இருந்த சிறுவர் பாதுகாப்புத் திணைக்களத்தில் அவர் எழுது வினைஞராகக் கடமையாற்றினார். பின்னர், ஆசிரியராக நியமனம் பெற்று 1964, 65ல் பறக்கடுவையில் புசல்லை தமிழ் வித்தியாலயத்தில் ஆசிரியராகப் பணியாற்றினார். அதே காலகட்டத்தில், 1963, 64ல் நான் அட்டாளைச்சேனை ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் பயின்றுகொண்டிருந்தேன். 1965ல் பொலன்னறுவையில் ஆசிரியனாகப் பணியாற்றினேன். எங்களுக்கிடையில் இருந்த தூரமும், எங்கள் இளமைக்கால இலக்கிய ஆர்வமும் எங்களைக் கடிதங்கள் மூலம் இணைத்தன. 1965ல் பறக்கடுவைக்குப் போய் நான் சடாட்சரனைச் சந்தித்தது,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தித்தது எல்லாம் இன்றும் என் நினைவில் உள்ளன. 1970 முதல் எனது வாழ்க்கை கொழும்பு, யாழ்ப்பாணம், கண்டி என நகர்ந்தாலும் கல்முனைக்கு வரும்போதெல்லாம் நாங்கள் சந்திக்கத் தவறுவதில்லை.

என்னுடைய முதல் கவிதை 1962ல்தான் பத்திரிகையில் வெளிவந்தது. சடாட்சரன் 1950களின் இறுதியிலிருந்தே பத்திரிகைகளில் எழுதத் தொடங்கிவிட்டார். அந்த வகையில் அவர் என்னைவிட மூத்த கவிஞர். வயதிலும் என்னைவிட அவர் நாலு வயது மூத்தவர். அவருடைய பல கவிதைகளுக்கு நான் முதல் வாசகனாக இருந்திருக்கிறேன். அதுபோல் என்னுடைய பல கவிதைகளுக்கு அவர் முதல் வாசகனாக இருந்திருக்கிறார்.

அரை நூற்றாண்டுக்கு மேலாக அவர் கவிதை எழுதிவந்திருகிறார். கல்முனைப் பிரதேசத்தில் மட்டுமன்றி, முழு இலங்கையிலும் அவர் குறிப்பிடத்தக்க முக்கியமான கவிஞர்களுள் ஒருவர். என்றாலும், காலம் தாழ்த்தியே 2012ல் அவருடைய கவிதைத் தொகுதி ஒன்று பாதை புதிது என்ற தலைப்பில் வெளிவந்தது. அதற்கு ஒரு முன்னுரை எழுதும் வாய்ப்பை அவர் எனக்குத் தந்தார். அவர் என்மீது கொண்டிருந்த நட்புக்கும் மரியாதைக்கும் அது ஒரு அடையாளம்.

பாதை புதிது சடாட்சரனின் மிகச் சிறந்த கவிதைகளுள் ஒன்று. 1965ல் அது கி. வா. ஜகநாதன் ஆசிரியராக இருந்த கலைமகள் இதழில் வெளிவந்தது. அது வெளிப்படுத்தும் மனோபாவமும், அதன் கவித்துவ வீச்சும் அக்காலத்தில் எங்களைப் பரவசப்படுத்தின. அக்கவிதை பற்றி நான் அவருக்கு எழுதிய கடிதம் இன்னும் தன்னிடம் இருப்பதாக ஒருமுறை பேசிக்கொண்டிருந்தபோது சடாட்சரன் என்னிடம் சொன்னார். இப்போதும் அந்தக் கவிதை எனக்குப் புதிதாகவே இருக்கிறது.

சடாட்சரன் ஒரு கவிஞராகவே அறியப்பட்டவர். எனினும் அவர் அவ்வப்போது சில நல்ல சிறுகதைகளும் எழுதியிருக்கிறார். பதினைந்து கதைகள் எழுதியதாக அவர் சொல்லியிருக்கிறார்.சொல்லியிருக்கிறார்.அவற்றுள் பதினொரு கதைகளைக் கொண்ட தொகுதி மேட்டு நிலம் என்ற பெயரில் 2009ல் வெளிவந்தது. ஒரு நல்ல கவிஞனின் முதல் நூலாக ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முரண்தான். என்றாலும், நீண்ட காலக் காத்திருப்பின் பின்னர் தனது நூல் ஒன்று வெளிவந்ததில் நண்பருக்கு ஓரளவு திருப்திதான்.

சடாட்சரன் கடந்துவந்த பாதை, அவர் கனவு கண்ட மனோரம்மியமான புதிய பாதையல்ல. நாம் எல்லோரும் கடந்துவந்த கல்லும் முள்ளும் நிறைந்த, மேடும் பள்ளமுமான பாதைதான். அங்கங்கே சில நீர்நிலைகள், சில பூஞ்சோலைகள். அதுதான் யதார்த்த உலகின் நடைபாதை. அந்தப் பாதையில் நடந்த அவரது அநுபவங்கள் அவரது கவிதைகளில் பதிவாகியுள்ளன. பெரும்பாலான கவிதைகள் நமது யதார்த்த உலகின் அநுபவப் பதிவுகள்தான். அவற்றில் மகிழ்ச்சியை விட வலி அதிகம் இருக்கும். குறிப்பாக 1990க்குப் பிறகு அவர் எழுதிய கவிதைகளில் இந்த வலி மனதைப் பிசையும் வலியாக இருக்கிறது. அவரது கவிதைகள் அவரது அனுபவப் பதிவுகளாக மட்டுமன்றி நமது வரலாற்றுப் பதிவுகளாகவும் உள்ளன. 1980க்குப் பின் அவர் எழுதிய இருபதுக்குச் சற்று அதிகமாக கவிதைகளில் பெரும்பாலானவை எதிர்பார்க்கக் கூடியதுபோல் போர்க்கால வாழ்வின் வலி உணர்த்தும் கவிதைகள்தான். போர்க்கால இலக்கியத்தில் சடாட்சரனின் பங்கும் குறிப்பிடத் தக்கது.

சமூகப் புன்மைகள் ஒழிந்து, இன மோதலும் முரண்பாடும் மறைந்து, அன்பும், இன்பமும், வளமும் நிறைந்து பொலியும் ஒரு சுவர்க்கத்தை இம்மண்ணில் காண விழையும் மனம் சடாட்சரனுடையது. அந்த மனதின் உணர்வுகள்தான் அவரது கவிதைகள். அவை மானுடம் பாடும் கவிதைகள். பாதை புதிது கவிதையின் தொனிதான் அவரது முழுக் கவிதைகளின் தொனியும் என்பதை நான் அழுத்திக் கூறலாம்.

நண்பர் சடாடசரன் ஒரு நல்ல கவிஞர் மட்டுமல்ல, ஒரு நல்ல மனிதர் நல்ல பண்பாளர். அவர் மறைந்துவிட்டாலும் நம் நினைவுகளிலும் தன் கவிதைகளிலும் தொடர்ந்து வாழ்வார் நிலைத்து வாழ்வார் என்று அமைதிகாண்கிறேன். அவரது ஆன்மா சாந்தியடைக...

**எம். ஏ. நுஃமான்**
பேராசிரியர் (ஓய்வுநிலை)
பேராதனைப்பல்கலைக்கழகம் - கண்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறைந்தும் மறையாத எங்கள் தாய்மாமா...

அன்பின் வடிவே
அறிவுரைக்கு ஆசான் போல
அவனியிலே எமக்கு கிடைத்த
அன்பு அம்மாச்சி

குஞ்சிதனில் கோழி கவனம்போல
பிஞ்சினில் எமை காத்தாயே - அன்று
அடைகாத்த அனைத்து குஞ்சும்
பாரினில் புகழ்பாடுது அம்மாச்சி

நின் பெயரில் நாங்கள்
நித்தம் நிமிர்ந்த நடைபோடுகிறோம்
உயிர் இருக்கும் வரை
உங்கள் பெயர் புகழ்பாடும் அம்மாச்சி

பிரிவில் வாடும்
**மருமக்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூரிப்பு...

கொதித்தாய் குமுறினாய்
கொள்கையில் சறுக்காமல்
உன் எழுத்தால் நெறுப்பாய் நிமிர்ந்து நின்றாய்
குத்துக்கணம் போட்டுக்
கொள்ளை அடித்து
குவித்துப் பெருக்கும் கூட்டத்தின்
முத்திரைகளை கிழித்தெறிந்தாய்
நீதியை நிலை நாட்ட
ஓயாதுழைத்தாய்...

உலுத்தர்கள் ஓடி ஒளித்திட
அதர்மத்தை ஆட்டம் காணவும்வைத்தாய்
பொறுக்காத புடையன்கள்
பொசுக்கென கொதித்தெழிந்திட
போய் விட்டாய்
ஊரெல்லாம் புலம்பி அழுகிறது
புதிய ஒளியாகப் புறப்பட்டு வருவாயா
உலகம் வியக்கும் மேதையாய்
எம்மண்ணை வளமாக்கி வாழவைக்க
புது மெருகு கண்டு மனங்கள் பூரிக்க
எங்கள் பூமி புகழ் ஓங்கிட்டும்

**மு. சடாட்சரம்**
(அப்பாவினால் எழுதப்பட்ட கவிதைகளில் ஒன்று)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கிய பேராளுமை மு. சடாட்சரன்

ஈழத்தின் கவிச்சக்கரவர்த்தியும் இலக்கிய பேராளுமையுமாகிய கவிஞர் நீலாவணனுடைய பண்ணையிலே வளர்ந்த மூத்த கவிஞர்களுள் ஒருவர்தான் சடாட்சரன் ஐயா அவர்கள். இவர் தனது *18*ஆவது வயதிலே இலக்கிய உலகுக்குள் பிரவேசித்தவர். கல்முனை R.K.M பாடசாலை, உவெஸ்வி உயர்தரப் பாடசாலை இரண்டினதும் பழைய மாணவராவார்.

மண்ணின் மகத்துவத்தை மான்புடன் நிலைநிறுத்தும் வகையில் தன்னலமற்ற சேவையாய் தடம் பதித்தவர் கல்விப் புலத்தில் நீண்டகால சேவையினை உடைய இவரது கல்விப்பணி ஆழமானது. *1963* இல் கொள்ளுப்பிட்டி பகத்தல வீதியில் இருந்த நல்லொழுக்க சிறுவர் பரிபாலன சேவை திணைக்கத்தில் எழுதுவினைஞராக, கடமையாற்றியுள்ளார். *1964 - 66* இல் புசல்லாவ தமிழ் வித்தியாலயத்தில் ஆசிரியராக பணியாற்றினார், பிரதி அதிபராக, அதிபராக, உதவிக்கல்விப் பணிப்பாளராக பதவி உயர்வு பெற்றவர்.பல கஷ்டப்பிரதேச பாடசாலைகளில் பணியாற்றியுள்ளார். ராணமடு இந்துக் கல்லூரியில் அதிபராக இருந்தபோது தினமும் வீட்டிலிருந்து துவிச்சக்கர வண்டியில் பிரயாணம் செய்துள்ளார் என அறிந்துள்ளேன். இதனை தற்காலத்து ஆசிரியர்கள் அறிந்து கொள்ள வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐயா அவர்களின் குடும்பப் பின்னணியை நோக்கும் போது இவரது மைத்துனன் கல்முனை பூபால் என அழைக்கப்படும் நீலாபாலன் ஆவார். இவரது சகலன் கலைக்கொழுந்தன். இவ்வாறு கல்முனையில் கலைக்குடும்பமாகவே வலம் வந்தவர். கவிஞர் நீலாவணனுடைய காலத்தில் தமிழ் எழுத்தாளர் சங்கத்தில் முக்கிய பதவிகளை வகித்தவர். அக்காலத்தில் மருதூர் கொத்தன், மருதூர் கனி, ஜீவா ஜீவரெத்தினம், பாண்டியூரான் போன்றவர்களின் எழுத்து துறைக்கு உரமூட்டியவர்கள். நவீன கவிதைகளின் முன்னோடி சடாட்சரன் ஐயா என கூறலாம். கல்முனையின் இலக்கிய வளர்ச்சியை எழுத முற்படுபவர் சடாட்சரன் ஐயாவின் நாமத்தை விட்டு எழுதவே முடியாது.

ஐயா அவர்கள் ஹொடகே விருது, வித்தகன், கலைமாமணி, கலைக்குருசில், மகரந்தசிறகு, கவிஞர், கலாபூசணம் போன்ற பல விருதுகளைப் பெற்றுள்ளார். 70 - 80 களில் கோயில் விழாக்களில் பல கவியரங்குகளை நடாத்தியுள்ளார். இலக்கிய வாதியாகவே செயற்பட்டவர். இவை மட்டுமன்றி ஒரு நாடக ஆசிரியருமாவார். கவிஞர் நீலாவணனுடைய "மழைக்கை" நாடகத்தில் கர்ணன் பாத்திரமேற்று நடித்து பாராட்டை பெற்றவர்.

ஐயா அவர்கள் கவிதை மட்டுமல்ல சிறுகதைகளும் எழுதியுள்ளார். 11 கதைகளைக் கொண்ட தொகுதி "மேட்டுநிலம்" என்ற பெயரில் புலவர் ஹாசிம் உமரின் "புத்தகப்பூங்கா" வெளியீடாக 2009 இல் வெளிவந்தது. இக் கதைகளில் மண் வாசனையை புலப்படுத்தியுள்ளார். அடுத்து 2012 இல் "பாதை புதிது" என்ற கவிதைத் தொகுதியை (தேர்ந்த 42 கவிதைகளை உள்ளடக்கி) வெளியிட்டுள்ளார், அப் புத்தகத்தின் முதற் பக்கத்திலேயே 1966 இல் தினகரனில் வெளிவந்த "அரசு" எனும் கவிதைக்கு நீலாவணன் எழுதிய இதயவாழ்த்தின் நிழல் பிரதியை சேர்த்துள்ளார். இதனைப் பார்த்தபோது ஆசானுக்கு செய்யும் அஞ்சலியாக மனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெகிழ்வடைகின்றது. இவை மட்டுமன்றி மெல்லிசை பாடல்கள் பலவற்றை எழுதியுள்ளார்.

அடுத்து எனக்கும் ஐயாவுக்குமான தொடர்புகளைப் பற்றி கூறலாம் என நினைக்கின்றேன். 2015 நான் விஷ்ணு மகா வித்தியாலயத்தில் அதிபராக இருந்த போது வாணிவிழாவில் ஐயாவை அழைத்து கௌரவித்தேன். கலுதாவளை கலைமாமணி விருது பெற்ற அரசரெத்தினம். ஐயா அவர்களும் வந்திருந்தார். ஆசிரியர் பேரின்பராஜா, சடாட்சரன் ஐயாவை பற்றி சிறப்பான சொற்பொழிவாற்றினார். அந்த நினைவுகள் பசுமையாகவுள்ளன. மேலும் அவுஸ்ரேலியாவில் இலங்கை மாணவர்களுக்கு உதவும் கல்வி நிதியத்தை நடாத்திக் கொண்டிருந்த சர்வதேச புகழ் பெற்ற எழுத்தாளரான லெ. முருகபூபதி அவர்கள் எங்கள் வீட்டிற்கு வந்திருந்தார். அவரது அழைப்பின் படி சடாட்சரன் ஐயா, செங்கதிரோன் கோபால கிருஷ்ணன், கிழக்கு பல்கலைகழக தமிழ் விரிவுரையாளர் செ. யோகராஜா நால்வரும் சேர்ந்து ஒரு இலக்கிய சந்திப்பை வெளிப்படுத்தினர். அன்று நானே சமைத்து சிறந்த விருந்து பரிமாறினேன். இதுவும் ஒரு பசுமையான நிகழ்வாக உள்ளது.

ஐயா அவர்களின் உடலை விட்டு உயிர் பிரிந்தாலும் அவரின் புகழுடம்பு என்றும் எம் கண்முன்னே நிலைத்திருக்கும். அன்னாரது பிரிவால் துயருறும் மனைவி, பிள்ளைகள் குடும்பத்தினருக்கு அனுதாபத்தை தெரிவிப்பதோடு ஆத்மா சிவபதம் அடைந்து சாந்தி பெற இறைவனை வேண்டுகிறேன்.

**திருமதி. சிவமணி நற்குணசிங்கம்**
(ஓய்வுநிலை அதிபர்)
பெரியநீலாவணை - 01B



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பான அத்தான்...

பாக்கியம் அக்காவிற்கு பாக்கியமாய்
கிடைத்த அத்தான்
அன்பிற்கு இலக்கணமாய்
அவனியில் வாழ்ந்து வந்தாய்.
பண்புடமை காத்து
பக்குவமாய் வழி நடந்தீர்
இரக்கத்தின் இருப்பிடமாய்
ஈகை பல செய்து எல்லோருக்கும்
நல்லவராய் நாணயமாய் நடந்தீர்
ஏனோ இறைவன் இடைநடுவில்
பறித்து விட்டான்

துன்புற்றோர் துயர் துடைத்து
துணைக்கரமாய் அடைக்கலம் தந்த உம்மை
ஆண்டவன் ஏனழைத்தான்
பண்புள்ளோரை பல காலம்
வாழவிடக் கூடாதென்றோ...?
என்ன செய்வோம்
இறைவன் சித்தம் இது
இனி காணமுடியாத சோக நிலையோடு
இங்கிருந்தே ஏங்கியழுகிறோம்.

கண் முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எங்கள் முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர்வாழும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பான உன் மனைவி
அருகிருந்த கவனிப்பும் அரவணைப்பும்

அத்தான் மண் விட்டு மறைந்து
நீங்கள் விண்நோக்கி சென்றாலும்
கண் விட்டு மறையாமல்
கனகாலம் இருப்பீர்கள்

இலக்கியம் என்றால் இன்புற்று இருப்பீர்கள்
கவிதைகளை வடித்து காவியம் படைத்தீர்கள்
இலக்கியம் தடுமாற இலக்கணம் தமிழ் மாற்
இத்தரணியில் புகழ் படைத்தீர்கள்.

அமைதியின் உருவமாகவும்
அடக்கத்தின் இருப்பிடமாகவும்
பண்பின் பெருந்தகையாகவும்
பாசத்தின் உறைவிடமாகவும்
எம்மத்தியில்
அன்பு ஒளியாக
இருந்த உத்தமரே
மண்ணோடு உங்கள்
பூதவுடல் மறைந்து விட்டாலும்
உங்கள் நினைவுகள் எங்கள்
இதயங்களில் இருந்து
ஒருபோதும் மறைவதில்லை

பூத்த உந்தன் கொடிகள்
தவிக்குதய்யா - பூவுலகத்தோர்
மனம் வெடிக்குதய்யா
பூக்காதோ மீண்டும் உந்தன்
வாழ்வு என்று - பூவையர்
புலம்பி நெஞ்சில் அடிக்கின்றனரே
ஆண்டவா ஏன்தான் பறித்தாயோ
அன்பை தான் முறித்தாயோ...




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத்தியமாய் நின்று உதித்த சடாட்சரம் ஐயாவே
துயரத்தில் தவிக்குதையா எம் நெஞ்சு
அமைதியாக துயிலும் தங்கள் ஆன்மா
இறைபதம் சேர இறைவனை
இறைஞ்சுகிறோம் அத்தான்.

ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி

ஆக்கம்
**வே. மாலமுகன்**
மூன்றாம் நிலை கல்வி அமைச்சின்
மின்சாரத்துறை கணிப்பீட்டாளர்
கல்முனை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

පාර්ලිමේන්තුව

பாராளுமன்றம்

PARLIAMENT

**மகரந்த சிறகு மறைந்து போனது......**

கலை விளையும் கல்முனை பகுதியிலே 1940ஆம் ஆண்டு மே மாதம் ஆறாந் திகதி மலர்ந்த கவிஞர்.மு.சடாட்சரம் அவர்கள் ஆசிரியராகி இறுதியில் உதவிக்கல்விப்பணிப்பாளராக கடமையாற்றிய கால கட்டத்தில் பல தடவைகள் நேரில் சந்தித்துள்ளேன். அவரின் வேட்டியும், வெள்ளை மேற்சட்டையும் இயல்பாகவே பழகும் பண்பும், பெருமிதம் இல்லா பேச்சும் அவர் மேல் ஓர் மரியாதையை தோற்றுவித்ததை உணர்ந்திருக்கின்றேன். அந் நாட்களிலே காலை வேளையிலே இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் ஒலி பரப்புச் சேவையில் ஒலிக்கும் ஈழத்துப்பாடல்கள் வரிசையிலே அன்னாரின் கை வண்ணத்தில் உருவான பாடல்களையும் கேட்டு மகிழ்ந்திருக்கின்றேன்.

இவர் நாடறிந்த நம் கவிஞர் ஈழத்து இலக்கிய வானில் சிறகடித்து பெருமை பெற்றவர். அவரின் குடும்பமே ஒரு கவிஞர் குழாம்தான் கவிஞர் கல்முனைப் பூபால் அவர்கள் மைத்துனர் ஆவார், கவிஞர் கலைக்கொழுந்தன் அவர்கள் சகலன் ஆவார். இவர்களில் இவரே வயதில் மூத்தவரானதால் முதல் கவிஞராய் திகழ்ந்தார்.

இவரின் தமிழ் புலமையும், கவித்திறனும் வித்தகர், கலாபூஷணம், கலைமாமணி போன்ற பல பட்டங்களை பெற்றுத்தந்தாலும், கம்பன் கழகம் அன்னாருக்கு மிக அரிதானதும், பெருமையானதுமான மகரந்த சிறகு என்னும் பட்டத்தை வழங்கி கௌரவித்து இன்று நம்மிடையே இல்லாமல் அந்த மகரந்த சிறகு மறைந்து போனது இதனால் மனவேதனை அடையும் குடும்பத்தவரின் மனங்கள் அமைதி பெறவும், அன்னாரின் ஆத்மா சாந்தியடையும் இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

தவராசா கலைஅரசன்
பாராளுமன்ற உறுப்பினர்
அம்பாறை மாவட்டம்.

தவராசா கலை அரசன்
பாராளுமன்ற உறுப்பினர்
அம்பாறை மாவட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காய் மனம்...

கொழும்புக்கு போகவேண்டும்
கொஞ்சம் சோறு கட்டு
வழிகளில் தொல்லை பார்த்தால்
வாட்டங்கள் தீராது
என்று வெளிக்கிட்டேன்

PUBLIC LIBRARY
MARUTHAMUNAI
MUNICIPAL COUNCIL
KALMUNAI


பிரிவை எண்ணி
வேதனைப் பட்டாள் சற்று
விழிமலர் பனிக்க வெண்டி
விரல்களால் துடைத்து விட்டு
அன்புக்களை நிறை பூ முகத்தாள்
என்னை கனிவுடன் அனுப்பிவைத்தாள்

புதுப் புதுக் கனவு
கண்கள் பூத்தன இரவு முற்றும்
வெது வெதுப்போடு எங்கள்
வேக்குகள் திறந்து மூடும்
முதியவர் எனினும்
சொந்த அடையாள அட்டையோடு
பதைத்திட இறங்க வேண்டும்
பஸ் நிற்கும் இடங்கள் தோறும்
பொதிகளைத் தூக்கித் தூக்கி
புழுங்கினோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நனைந்து போனோம்
ஒருபகல் மட்டும் அங்கே
ஓரிரு அலுவல் பார்த்தேன்
பரபரப்பெங்கும்
மக்கள் பயத்தினால்
இயங்குகின்றார்.
புறப்பட்டேன் போன பஸ்ஸில்
போதும் நான் வந்ததென்றேன்
உரிமையாய் நின்று பேச
ஒருவரின் முகமும் காணேன்.
கருமேகம்பட்டும் வானில
காய் மனம் நிறைதல் கண்டேன்.



**மு. சடாட்சரம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தந்தையின் நினைவுகள்...

சடாட்சரம் என்ற முருகன் பெயர் கொண்டதினால் முருகனே குல தெய்வம். இதனால்தான் முருகனுக்கு கொடியேறும் வேளை உங்கள் ஆத்மாவும் அவன் பாதம் சென்றதோ. பிரம்மமுகூர்த்தத்தில் "கூற்றாயினவாறு" துதிபாடி குறைகள் பல நீங்க குற்றாலக் குமரனையும், அவன் அப்பன் சிவனையும் வணங்கி யோகாசனம் செய்து யோகமாய் வாழ்ந்தவர் எங்கள் அப்பா.

கையில் தேநீர் குவளையை ஏந்தி சாய்மனைக் கதிரையில் சரிந்து நாட்டு நடப்புக்களை நன்றாய் கேட்டு ரசித்திடுவார்.

எங்கள் அப்பா நீதி, நேர்மை கொண்டவர், கடமையும், கண்ணியமும் கூட யாரிடமும் கெஞ்சிப்போகும் மனமும் இல்லைதான். இதனால்தான் இரண்டு தங்கைமாரின் அரசதொழிலும் கைநழுவிப் போனது. கர்ணனும் அர்ச்சுனனும் உங்களுக்காகவே தோன்றியவர்கள் தான் அப்பா.

அப்பா கலைகள் வடிக்கும் கலைஞனுக்கு கஸ்ரம் அதிகம். அதனை உங்கள் மூலம் அறிந்தேன் தனது கஸ்ரத்தை கவிதையாக வடித்த நீங்கள் சுமைகளை எங்களுக்கு சொல்லாது வாழ்ந்துள்ளீர்கள். ஏழ்மையானவர் என்பதனால் எளிமை விரும்பி நீங்கள். சிறுபிள்ளைக் குணமும் உங்களுக்கே. எடுத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடனே பேசி விடுவதும் உங்கள் இயல்பே. அடுத்த கணமே யோசிப்பது நீங்கள் "தந்தை சொல் மிக்க மந்திரமில்லை" என்பது ஆன்றோர் வாக்கு. அவ்வாறே உங்கள் வாக்குகளும்.

தீர்க்க தரிசி நீங்கள், தனக்கு நடக்கப்போவதை முன்கூட்டியே உணர்த்தியவர். 6 ஆம் திகதி பிறந்து அதே திகதியில் உங்கள் பிரிவும் . அப்பா நீங்கள் திட்டமிடும் அதிகாரிதான். எந்த ஒரு செயலையும் செய்வதற்கு முன் திட்டமிட்டு அதற்கு ஏற்பசெயற்படுபவர். ஐந்து மாதங்களுக்கு முன்னர் ஐந்து புத்தகங்கள் உங்களிடம் கேட்டேன். எழுதித் தா எடுத்துவைக்கின்றேன் எனறீர்கள். அதுவும் எனக்கு ஏமாற்றம்தான். இறுதி நேரத்திலும் பெற்றுக்கொள்ள எத்தனித்தேன். "வேலை நேரம் வந்தாய் பிறகு வா" என்றீர்கள்.

அப்பா நீங்கள் தான் என்கற்றலுக்கு உறுதுணையாக இருந்தீர்கள். நான் கல்வியற்கல்லூரிப் போட்டிப்பரீட்சைக்கு விண்ணப்பித்து கூடுதலான புள்ளிகளைப் பெற்று நேர்முகத்தேர்விற்கு தெரிவு செய்யப்பட்டு சென்ற வேளை என்னுடன் என் அப்பாதான் வருவார். உயர்தரத்தில் நான் தமிழ் பாடத்தை ஒரு பாடமாக எடுக்காததினால் ஆரம்பகல்விக்கு தெரிவாகவில்லை எனினும் அடுத்த வருடம் விண்ணப்பம் கோரி பல இடங்களில் நேர்முகதேர்வு இடம்பெற்ற வேளை அப்பாதான் பத்திரமாக அழைத்துச்சென்றவர். என் அப்பா பரீட்சைகளுக்கு மேற்பார்வையாளராக செல்லும்போது என்னையும் அழைத்துச்செல்வது வழமை. தேசியக்கவி நிறுவகம் நடத்திய ALIC சிங்கள வகுப்பிலும் சேர்த்தார். பின்னர் பட்டப் பின் கல்வி டிப்ளோமா முடிப்பதிலும் உறுதுணைதான் M. E. D க்கு விண்ணப்பிக்கும்படி அழுத்தங்கள் அதிகம். தவிர்க்க முடியாத காரணமாக அதனையும் மேற்கொள்ள முடியவில்லை அதுவும் கோபம்தான்.

"தந்தையோடு கல்விபோம், தாயோடு அறுசுவைபோம்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதற்கு ஒப்ப அப்பாவின் ஊக்குவிப்புதான் எனக்கு முக்கியமாக அமைந்தது. அப்பா ஐந்து புத்தகமும் தான் அலை பாயுது. போனது போகட்டும், இருப்பதைக் கொண்டு இயல்புறநானும் உங்கள் நினைவுகளில்.

அன்பு மகள்
**கீர்த்தி**
**National Diploma in Teaching &**
**BA Dip in Education**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மு.ச. என அன்பாய் அழைக்கப்படும் கவிஞர் மு.சடாட்சரன் பற்றிய சில துளிகள்

*1940 ஆண்டு வைகாசி மாதம் 06 ஆம் திகதி கனகம்மா முருகேசு தம்பதியினருக்கு பாசமிகு புதல்வனாய் கல்முனை - 03, தரவைக்கோயில் வீதியில் அவதரித்தாய்...*

*கல்முனை - 03 சின்னத்தம்பி வீதியில் பிரபல வைத்தியர் நாகமணி வைத்தியர் குடும்பத்தில்; நல்லதம்பி பூரணிப்பிள்ளை தம்பதியினரின் செல்வப்புதல்வி பாக்கியத்தை திருமணம் செய்து சீரும் சிறப்பாகவும் வாழ்ந்து வந்தார். கவிஞர் மு. சடாட்சரம்.*

*இல்லற வாழ்வில் பார்த்திபன், நவீனன், கீர்த்தினி, தமிழழகி, நவநிதி, வித்தியாணி, திருமகள் ஆகிய பிள்ளைகளைப் பெற்று கல்வியிலும், சமூகப்பணியிலும் இன்னும் பல சிறப்புமிகு பணிகளிலும் ஈடுபட்டு சீர்பெற்று வாழ்ந்தார்..... இவர் ஒரு கவிஞர்.*

*நாடகக்கலைஞராய், விமர்சகராய், திறன் ஆய்வாளராய், எழுதுவினைஞராய், ஆசிரியராய், அதிபராய், உதவிக்கல்விப் பணிப்பாளராய், சேவைகளாற்றி......... கல்விமானாய்,............*

*கலைமாமணி விருது, ஹொடகேவிருது, கலைச்செல்வர், கலைக்குருசில் விருது, கலைவித்தகர் விருது, கவிஞர் இலக்கியவாதி விருது, மகரந்தசிறகு விருது, சிறுகதை*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுத்தாளர் விருது, நாடக ஆசிரியர் விருது, கவியரங்கத்தின் முன்னோடி விருது, வித்தகர் விருது, கலாபூசணம் விருது இன்னும் பல விருதுகள் கண்ட நிலையில்
"புதியபாதை" கவிதைதொகுப்பு நூல் வெளியீடும்,
"மேட்டுநிலம்" சிறுகதை தொகுப்பு நூல் வெளியீடும் நிறைவாக வெளியிட்ட நிலையில்.......

இன்னும் சில நூல்கள் வெளியிட தொகுத்த நிலையில் வெளியிடாமல் இறையடி சேர்ந்து விட்டாய்..... கலைஞரே,

கல்முனை ஸ்ரீ தரவைச் சித்திவிநாயகர், கல்முனை கடற்கரை கண்ணகியம்மன் ஆலயங்களின் பக்தராகவும், உணர்வு கொண்ட நெறியாளராகவும் பல ஆண்டுகள் மகிழ்ச்சியாய் இருந்து பணிகளும் செய்தாய்....

கரைவாகு கண்டத்தில் நம்மவருடன் நெல்வயல் செய்து போடியாராகவும், தட்டுமாறு வயலுக்கு ஒரு குழு உறுப்பினராகவும் செயற்பட்டு வந்தவேளை, முறன்பாட்டு பிணக்குகள் தாங்கமுடியாதநிலையில் இடமாற்றம் பெற்றுவிட்டாய்...

இவரது துணையில் பல கவிஞர்களும் எழுத்தாளர்களும் உருவாகியநிலையில் அமரர். கல்முனைப்பூபால்(நீலாபாலன்) என அன்பாய் அழைக்கப்பட்ட கவிஞரும் எழுத்தாளரும், சமூகப்பணியாளரும் ஆவார். இவரது மைத்துனர் என்பதில் மகிழ்ச்சி அடைந்தார்.

கல்முனை **03**ம் குறிச்சியில் **1955-1963** காலப்பகுதியில் பகுத்தறிவு மன்றம் உருவாகிய நிலையில் இவரும் இணைந்து கல்வி, கலை, கலாசாரம், சமூகப்பணி, இறையியல் தொண்டு போன்றவற்றிலும் செயற்பட்டு வந்தார்.

பெரியநீலாவணையில் வாழ்ந்த காலம் முழுவதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்விப்பணியிலும், சமூகப்பணியிலும் இன்னும் இறையியற்பணியிலும் ஈடுபட்டு வந்தார்.

இவர் பற்றிய ஆய்வு தென்கிழக்குப் பல்கலைக்கழக மாணவரால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

உங்களின் பிரிவில் வேதனை அடையும் மனைவி, பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், மருமக்கள், சகோதரிகள், உற்றார், உறவினர்கள் அனைவரையும் மனநிறைவு கூர்ந்தவனாக...

நெருங்கிய உறவு மைத்துனர்
**வேலுப்பிள்ளை தங்கவேல் JP**
சிகரம் அதிபர்
முன்னாள் ஆலயங்கள்
பரிபாலன சபைத்தலைவர்
கல்முனை - 03.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
MARUTHAMUNAI
MUNICIPAL COUNCIL
KALMUNAI

# அப்பா...

தத்தி தவண்டு
தரணியில் காலெடுத்து
தாம் தீம் என
தள்ளாடி நான் நடக்கையில்
தட்டி கொடுத்து
தாவி தழுவி
மணலில் விரல் பிடித்து
அ....ஆ....இ....ஈ...
அகரவரியை
அழகாக அளவெடுத்து
ஆனந்தமாக கற்றிட
ஞான கதைகள் பல கூறி
அறிவை புகட்டிய
படகோட்டி நீங்கள்!
இன்று
தடி எடுத்து தள்ளாடி
குழந்தை மொழி பேசி
பேரன் பேத்தியுடன்
நிலா சோறு உண்ணுகையில்
நிலை தடுமாறுதே
என் உள்ளம்
நாவுக்கு சுவை தேடி
நல்லது கேட்கையில்
நானும் எனக்குள்
நடை பிணம் தான் அப்பா

அன்பு மகன்
**எஸ். பார்த்தீபன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேரப்பிள்ளைகளின் நினைவுகளில்...

பக்கம் பக்கமாக
கவிதை இயற்றிய உமக்கு
நான் இன்று கண்ணீர்
கவிதை எழுதுகிறேன்.

உம்மை வாத்தி வாத்தி
என்று கொஞ்சினேன்
நீரோ பேத்தி பேத்தி
என்று கொஞ்சினாய்

பாலுட்டி சோறூட்டி
என்னை வளர்த்த தாத்தா
என் வாழ்வின் இன்ப துன்பம்
எல்லா நொடிகளிலும்
என்னோடு சேர்ந்து
பயணித்தவரே!

அது இது எது கேட்டாலும்
ஒரு நொடியில்
பிச்சி பிடுங்கி
தந்திடுவீரே!

**நேசரஞ்சன் நிதர்சனா**
*பெரியநீலாவணை - 01.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாத்தாவுக்காக....

அன்பின் இலக்கியம் தர்ததா
அறிவின் இலக்கணம் தாத்தா
பண்பின் பணிவு தாத்தா
அமைதியின் சாந்தம் நீ தாத்தா
என் உயிரே தாத்தா

**நந்தகுமார் ஹம்சாயினி**
பெரியநீலாவணை - 01.

## தாத்தாவின் நினைவுகள்...

நான் தாத்தா
என்றழைக்க
போடா நாளை
வாடா என்பீர் தாத்தா
பொல்லை தூக்கி
துணிவுடன் நடந்து
உன் வாழ்க்கதை
அனுபவம்
கதையாம் எமக்கு
கனிவுடன் கூறுவாய்

**சனாதனன் தயாநிதி**
பெரியநீலாவணை - 01.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகத்தான கலைஞன் சடாட்சரம் ஐயா!

கல்முனை உவெஸ்லியில் உதவி அதிபராக கடமையாற்றிய காலத்தில் பாடசாலையின் வலயமட்ட மேற்பார்வையின் போது இலங்கை நிர்வாக சேவையின் சித்திரபாட உதவிக் கல்விப்பணிப்பாளராக நியமிக்கப்பட்டு கறுப்பு நிற அலுவலகப்பையுடனும் வெள்ளை வேட்டி சட்டையுடனும் அதற்கேற்ப காலில் கறுப்பு நிற சப்பாத்துடனும் திரு. சடாட்சரம் ஐயா எனக்கு அறிமுகமானது இன்றும் ஞாபகமாயுள்ளது.

அவ்வேளையில் கல்முனை உவெஸ்லியில் பிரதி அதிபராக இருந்து காலஞ்சென்ற திரு. பொன்முருகையா அவர்கள் தான் ஆசிரியராக அன்னமலை நாவிதன்வெளி மகாவித்தியாலயத்தில் பணியாற்றியபோது திரு. மு. சடாட்சரம் அவர்கள் அதிபராகச் அப்பிரதேச மாணவர்களின் நலனுக்காக பல செயற்பாடுகளை மேற்கொண்டவரென்றும், ஆசிரியர்கள் மாணவர்களின் நலனில் அக்கறை செலுத்தி சிறப்பாக பணியாற்றியதாகவும், அதிபர் ஆசிரியர்கள் எல்லோரும் துவிச்சக்கர வண்டியிலேயே கல்முனையிலிருந்து பாடசாலைக்கான தங்களின் பயணம் அமைந்ததாகவும், எதிர்காற்று வீசுகின்ற காலங்களில் எதிர்நோக்கிய கஷ்டங்களையும் கூறினார். அதன் பின்னர் ஐயா பற்றிய பல விடயங்களை அறியக்கூடியதாயிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகள் கீர்த்தினி அங்கு ஆசிரியையாக கற்பிக்க வந்தபோது அவர்களின் குடும்ப விபரங்கள் பலவற்றையும் அறிய முடிந்தது. திரு. மு. சடாட்சரம் அவர்கள் எழுத்தாளராக கவிஞராக இலக்கியவாதியாக திகழ்ந்த விடயங்களை அவ்வப்போது நடைபெறும் இலக்கிய விழாக்கள் புத்தக வெளியீடுகளின் போது கூறப்படுகின்றவற்றை செவிமடுக்கையில் அறியக்கூடியதாக அமைந்தது.

இலங்கையிலுள்ள எழுத்தாளர்கள் தமது நூல்களை வெளியிடுதல் என்பது பிரசவவேதனையை விடக் கடினமானது என்பார்கள். அந்நிலமை இந்த மகத்தான கலைஞனுக்கும் பொருந்தும். அவரது " மேட்டுநிலம் " சிறுகதைத்தொகுதிக்கான புத்தக வெளியீட்டு விழாவில் அவரது நீண்டநாள் ஏக்கம் தாகம் ஓரளவு தீர்க்கப்பட்டிருக்கும் என நம்புகிறேன்.

வேட்டி மாத்திரம் அணிகின்ற ஆசிரியப்பரம்பரை படிப்படியாக இல்லாமல் போகின்ற காலத்தில் ஐயாவின் தமிழறிவு கற்பித்தல் பாங்கு என்பவற்றை உள்வாங்கி அடுத்த தலைமுறைகள் இருக்கும் வரைஅவரது நினைவுகள் என்றும் நிலைக்கும் என்பது திண்ணம்.

பலரது எழுத்தாற்றலை ஊக்குவித்தவர். சரிப்படுத்தி நெறிப்படுத்தி மெருகூட்டிக்கொடுத்த ஐயா அவர்கள் இன்றில்லை என்றாலும் அவரால் பட்டை தீட்டப்பட்டவர்கள் இலக்கிய உலகை எதிர்காலத்தில் ஆள்வார்கள் என நம்பலாம். அவரது இறுதிக்கவிதை அவரது மரணத்தை முன்னுரைத்தது என சொல்லப்பட்டது போல அடுத்தவரை நோகடிக்காது தனது ஓட்டத்தை ஓடி முடித்துள்ளார். அவரது பணியும் வாழ்வும் இறைநாமம் மகிமைபட வாழ்ந்தமைக்காக இறைவனுக்கு நன்றி கூறுவோம்.

**வடிவேல் பிரபாகரன்**
ஓய்வு நிலை அதிபர். கல்முனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகரந்தச்சிறகு விருது!



## கவிஞர்
## சடாட்சரன்

திரு. திருமதி முருகேசு கனகம்மா தம்பதியினரின் புதல்வரான கவிஞர் சடாட்சரன் அவர்கள், மட்டக்களப்பு கல்முனையைப் பிறப்பிடமாகக் கொண்டவர்.

1959இல் சுதந்திரன் பத்திரிகையில் வெளியான 'பாரதி யார்?' எனும் கவிதையுடன் தனது கவிதைப் பயணத்தை ஆரம்பித்த இவர், 60களில் கவிஞர் நீலாவணன், மருதூர்க் கொத்தன், நுஃமான் ஆகியோரோடு கைகோர்த்து, கல்முனைப் பிரதேசத் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்குப் பெரும் தொண்டாற்றியவராவார்.

சிறந்த மரபுக்கவிதைகளையும், தரமான புதுக் கவிதைகளையும் எழுதியுள்ள கவிஞரான இவர், நாடகஆக்கம், நடிப்பு, மேடைப்பேச்சு, சஞ்சிகை வெளியீடு எனப் பன்முக ஆற்றல் கொண்டு விளங்குபவர்.

'பாதை புதிது' எனும் கவிதை நூலோடு, சிறுகதை நூலொன்றினையும் வெளியிட்ட பெருமைக்குரிய இக்கவிஞர், இலங்கை அரசின் கலாபூஷண விருது, அரச சாஹித்திய விருது, கிழக்கு மாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்கள விருது, கொடகே சாஹித்திய விருது போன்ற பல விருதுகளைத் தனவயப் படுத்தியுள்ளார்.

தன் கவிதைகளோடு அனைவரும் மகிழ்ந்து வாழ்கிற ஒரு புத்துலகை ஆக்க முனைந்து வரும் இக்கவிஞரின் கவிதைப் பணியைப் பாராட்டி, கவிக்கோ அப்துல் ரகுமான் அவர்களால் நிறுவப்பட்ட மகரந்தச் சிறகு விருதினை இவ்வாண்டின் வழங்கி, கம்பன்கழகம் மகிழ்வு கொள்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சடாட்சரன் ஐயாவுக்கு கண்ணீர் துளிகளால் அஞ்சலி செலுத்துகின்றேன்.

அமரர் கலாபூசணம், கவிஞர் மு. சடாட்சரன் ஐயா அவர்கள் ஒரு சிறந்த மனிதனாக கலைத்துறையில் பன்முகம் காட்டி வாழ்ந்த ஒருவராக எல்லோராலும் அறியப்பட்டாலும் எனது வாழ்வில், ஒரு முதற் குருவாகவே, வழிகாட்டியாக போற்றப்படுபவர். அவரது குடும்பத்தினருக்கு மட்டுமல்ல, கலையுலகிற்கும், கல்வித்துறைக்கும் பாரிய இழப்பாகவே நான் கருதுகின்றேன்.

நான் கமு/ பெரியநீலாவணை சரஸ்வதி வித்தியாலயத்தில் தரம் - 03 இல் கல்வி கற்கும் போது எனது பாடசாலையின் அதிபராக அறிமுகமான பொழுதில், ஓர் ஆசிரியர் எவ்வகையான தோற்றத்தில் காணப்படுவார் எனும் எமது கற்பனைக் கேற்ப வேட்டி, வெண்ணிற நீலக்கை ஜிப்பா, உயர்த்தி வாரிய தலைமுடி, நிமிர்ந்த நடை, கணீரென ஒலிக்கும் குரல், என சிறிய மாணவர்களாகிய நாங்கள் இரசிக்க கூடிய வகையில் காட்சியளித்தார். வீட்டில் போய் கூறியபோது எனது அம்மா, அப்பாவுக்கு மிகவும் பரிட்சயமானவராகவே இருந்தார். என்னிடம் விசேடமான அன்பு காட்டி கற்பித்தார். மாணவர்களை கட்டுரை, சித்திரம், நாடகம், பேச்சு போட்டிகளில் பங்குபற்றச் செய்வதில் முழுமூச்சாக செயற்பட்டார். எங்களை சிறந்த முறையில் பயிற்றுவித்தார். மிகவும் அழகாக எழுதுவார். பல பாடல்களை இசையுடன் பாடி எங்களுக்கு அபிநயங்களுடன் கற்பிப்பார். இளவயதில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழிலும், சமயத்திலும் எனக்கு பற்றும் ஆர்வமும் ஏற்பட அவருடைய சிறந்த வழிகாட்டல் காரணமாக அமைந்திருந்தது. அவருடைய சிறந்த கற்பித்தல் காரணமாக 1983 ஆம் ஆண்டு தரம் - 05 புலமைப்பரிசில் பரீட்சையில் சிறப்பாக சித்தியடைந்திருந்தேன். பல நாட்களில் தன்னுடைய வீட்டுக்கு மாணவர்களை அழைத்து பாடங்களை கற்பித்து தந்திருக்கின்றார். கலை நிகழ்ச்சிகளை பழக்கி தந்திருக்கின்றார். சிறப்பாக ஓவியம் வரையக் கூடியவர். அதற்கான நுட்பங்களைச் சொல்லித்தருவார். பாடசாலைகளில் கூட்டுப் பிரார்த்தனைகளை ஒழுங்குற நடாத்துவதற்கு ஏற்பாடுகளைச் செய்திருந்தார். பெற்றோரோடும், ஊர் மக்களோடும் சிறந்த நட்புறவை பேணியதுடன், சரஸ்வதி பூசை விழா விளையாட்டுப்போட்டிகள், ஆசிரியர் தினம் போன்ற நிகழ்வுகளை பாடசாலையில் சிறப்புற நிகழ்த்திக் காட்டியருந்தார். வானொலியில் அவருடைய கவிதை மன்றங்களையும் கேட்டு மகிழ்வுற்றிருக்கின்றோம். பெருமிதமடைந்திருக்கின்றோம். இவ்வாறு சிறந்த தலைமைத்துவ பண்புகளை தன்னகத்தே கொண்டிருந்த குரு ஒருவரின் வழிகாட்டல்களே, இன்று எங்களை கல்வி மற்றும் ஏனைய செயற்பாடுகளில் சிறப்பாக வழிநடத்திக் கொண்டிருக்கின்றன.

பின்னாளில் ஓர் உதவிக்கல்வி பணிப்பாளராக தனது பதவியுயர்வைப் பெற்று கல்முனைப் பிரதேசத்துக்கு சிறந்த கல்விச் சேவையையும் ஆற்றியிருந்தார். எனது வாழ்வின் முக்கியமான சந்தர்ப்பங்களில் அவரிடம் நேரில் சென்று ஆசிர்வாதம் பெறுவதை வழக்கமாக்கிக் கொண்டிருந்தேன். பல பொதுமேடைகளில் அவர் என்னை தனது சிறந்த முதல் மாணவனாக சிலாகித்து பேசியிருக்கின்றார். நானும் பல பொதுமேடைகளில் அவரிடம் ஆசிர்வாதம் பெற்றிருக்கின்றேன். இவ்வாறு எனது மறக்க முடியாத ஒரு முக்கிய பாத்திரமாகவே அவர் வாழ்ந்து கொண்டிருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறான பொதுப்பணிகளோடு தனது குடும்பத்திற்கும் சிறந்த தலைவனாக தனது பணிகளைச் சிறப்புற செய்திருக்கின்றார். பிள்ளைகளுக்குரிய கல்வி, பொருளாதாரம் போன்ற விடயங்களை தன்னால் முடிந்தளவு ஏற்படுத்திக் கொடுத்திருக்கின்றார். தனது பிறப்பின் நோக்கத்தை தனது வாழ்நாளில் சிறப்பாக நிறைவேற்றியிருக்கின்றார் என்றே கருதுகின்றேன்.

அன்னாருடைய ஆத்மா, எல்லாம் வல்ல இறைவனின் பாதார கமலங்களில் இளைப்பாறுதலடைய இருகரம் கூப்பி பிராத்திப்பதோடு அவரது பிரிவால் துயருறும் மனைவி, பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவருக்கும் இறைதுணை கிடைக்க பிராத்திக்கின்றேன்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!

**வேதநாயகம் ஜெகதீசன்**
(இ.நி.சே - விசேட தரம்)
மேலதிக செயலாளர்
போக்குவரத்தது மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு
கொழும்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறக்கவில்லை மாமா...


மாமா!
நீங்கள் மீளாத்துயில் கொண்டு
நெடும் பயணம் சென்ற செய்தி
மாளத் துயர் கொண்டெம்மை
மனம் நோகச் செய்ததுவே
அப்பாவின் இலக்கியப் பாசறையில்
அன்புடன் பயணித்தீர்கள்
ஆகையினால் எங்களுக்கு
அன்பு மாமாவாகினீர்கள்
மாமா எனும் உறவுக்கு உயிரூட்டி
மருமக்கள் எங்களோடு உறவாடினீர்கள்
புன்னகை பூத்த முழுவதனம்
வெண்மை நிற வேட்டியுடன்
அம்மாவை "அக்கா" என அழைக்கும்
அழகை நாம் இன்னும் மறக்கவில்லை
அந்திப் பொழுதுகளில் நீங்களும் நண்பர்களும்
என் தந்தையுடன் இலக்கியச் சந்திப்புகள்
அனல் பறக்கும் விவாதங்கள் இருந்தாலும்
தினந்தோறும் இதுவே நிகழும்
சைக்கிளில் நான் உங்களோடு கல்முனைக்கு வந்து
வேந்தன், விழியோடு விளையாடி மகிழ்ந்ததெல்லாம்
கனவுபோல் இப்போதும் கண்முன்னே வந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதைகள் பல சொல்லிச் செல்கிறது
நீங்கள் மட்டுமன்றி உங்கள் குடும்பமுமே
அப்பாவை “அண்ணன்” என அன்பாக அழைத்து
எங்களோடு இன்றும் பாசமுடன் பழகும் விதம்
உங்களால் தானே மாமா
இறுதித் தருணங்களில் காணமுடியவில்லை
இருந்தாலும் உங்கள் முகம் என்றும் மறக்காது மாமா
இறைவனடி உங்கள் ஆத்மா இளைப்பாற
இறைஞ்சுகின்றோம் இறைபாதம்

மருமகள்
**ஊர்மிளா வேதநாயகம்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐயாவுக்கு இறுதி அஞ்சலி

கல்முனையில் பிறந்து வளர்ந்து, கல்விகற்று வாழ்க்கை துணையுடன் பின்னைகயோடு பெரிய நீலாவணை கிராமத்தில் உற்றார் உறவுகளோடு வாழ்க்கையை இனிதாக தொடங்கினார் எமது சடாட்சரம் ஐயா அவர்கள். கற்றோர் சபையினிலே ஆசிரியராக அதிபராக உதவிக் கல்விப்பணிப்பாளராக தலைநிமிர்ந்து மற்றோருக்கும் வழிகாட்டியாக வாழ்ந்து காட்டினார்.

பெரிய நீலாவணையில் ஆரம்ப பாடசாலையாக இயங்கிக் கொண்டிருந்த சரஸ்வதி வித்தியாலயத்தில் அதிபராக பொறுப்பேற்றும் மாணவர்களின் ஆரம்பக்கல்வி வளர்ச்சிக்காக ஆசிரியர்கள், பெற்றோர்களை இணைத்து அப்பாடசாலையின் வரலாற்றில் தரம் - 05 புலமைப் பரிசில் பரீட்சையில் மூன்று மாணவர்களை சித்தியடையச் செய்து வரலாறு படைத்தார். கிராம மக்களோடு இணைந்து மாணவர்களின் முன்னேற்றத்திற்கு பல ஆலோசனைகளை வழங்கி நல்வழிப்படுத்தினார்.

சடாட்சரம் ஐயா அவர்கள் ஒரு கவிஞராக இருந்து கிராமிய சூழலில் இயற்கை வளத்தை தனது கவிதைகள் மூலமாக வெளி உலகத்திற்கு ஊடகங்கள் மூலமாக தெரியப்படுத்தினார். எப்போதும் மற்றவர்களை தம்பி என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாசத்துடன் அழைத்து குடும்ப நலங்களை அறிவதில் அவரின் மனிதநேயத் தன்மை வெளிப்படுகிறது.

அவர் அரசாங்க பொதுப்பரீட்சைகளில் பிரதம மேற்பார்வையாளராக கடமை புரியும் சந்தர்பங்களில் நானும் அவருடன் கடமை புரிந்துள்ளேன், பரீட்சை கடமைகளில் எப்போதும் நேர்மையாக கடமை புரியும் ஆசானாக காணப்பட்டார். அடிக்கடி பல புத்திமதிகளை கூறுவார். எப்போதும் மற்றோரை மகிழ்விக்கும் கருத்துக்களை வழங்குவார்.

கலை இலக்கிய உலகில் கல்முனை பிரதேசத்தில் ஒரு முன்னோடியாக திகழ்ந்தார் என்பதனையும் இந்த நேரத்தில் நினைவு கூற கடமைப்பட்டுள்ளேன். பல இலக்கிய மேடைகளில் இவரின் பேச்சாற்றலையும், கவிதை நயத்தினையும் மெய்மறந்து இரசித்த பல சந்தர்பங்கள் உண்டு.

ஐயா அவர்கள் எம்மை விட்டு பிரிந்தாலும் அவர் இலக்கிய உலகில் என்றும் வாழ்ந்து கொண்டிருப்பார் எனக்கூறி அவரின் ஆத்துமா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை பிராத்திக்கின்றேன்.

ஓம் சாந்தி!

**பொ. ஜெகநாதன்**
ஓய்வு நிலை கோட்டக்கல்வி பணிப்பாளர்
பெரிய நீலாவணை - 02.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் கலாபூசணம் முருகேசு சடாட்சரன்
## (ஓய்வு பெற்ற உதவிக்கல்வி பணிப்பாளர்)

கிழக்கின் ஒளியாய் கவிதையின் ஊற்றாய் உலகறிந்த உன்னத கலைஞனாய் உலவிய மனித மாணிக்கம் மண்ணில் மறைந்தாலும் விண்ணில் விண்மீனாய் என்றும் வலம் வருவார் எம் சடாட்சரன் ஐயா.

06-07-2024 அன்று அமரத்துவம் அடைந்த அன்னாரின் நினைவுகளுடன் நானும் சில விடயங்களை அவர் நினைவாக பதிவிடுவதில் மனம் திருப்தி அடைகின்றேன்.

ஐயா அவர்கள் எம்மண்ணின் பொக்கிஷம் ஓர் அணையாவிளக்கு உலகில் எம் கல்முனை, நீலாவணை மண்ணிற்கும் பெருமை சேர்த்த ஓர் பேரறிவாளன். பன்முகத்திறமை கொண்ட மாபெரும் கலைஞன். இவரின் மறைவு எம்மண்ணிற்கு பெரும் இழப்பென்றே கூறவேண்டும்.

கவிதை மட்டுமன்றி, பாடல், கதைகள், கட்டுரைகள், விமர்சனம் என இவர் எழுதிய துறைகள் பல. சிறந்த மெல்லிசைப்பாடல்கள் பலவற்றை எழுதியவர். இதுவரை வெளிவராத பாடல்கள் அவரிடத்தில் உண்டு. தனக்கான மிகப் பெறுமதி மிக்க சொத்தாக இவற்றையே பத்திரப்படுத்திய ஓர் உத்தமர் அவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுத்துப்பணி மாத்திரமின்றி சிறந்தவொரு ஆளுமை மிக்க நிர்வாக அதிகாரியாகவும் தன்னை நிலைநிறுத்திய கல்விமான் ஐயா அவர்கள். அவருடைய உதவிக் கல்விப் பணிப்பாளர் கடமையை எவ்வித குறைவுமின்றி நிறைவாக ஆற்றிய சிறப்புக்குறியவர்.

மேலும் சமயப்பணி, சமூகப்பணி எனவும் தனது சேவையை அகலமாக்கியவர் ஐயா அவர்கள். தமது குடும்ப பொறுப்பையும் நிறைவாக ஆற்றிய சிறந்த கணவராக கட்டுப்பாடும் பொறுப்பும் மிக்க தந்தையாக விளங்கி தனது பிள்ளைகளை கருத்துடன் கல்வி புகட்டி அரச பதவிகளில் அமரச் செய்தவர் அவர்கள். மூப்பிலும் பணியிலும் அவருக்கிருந்த நினைவு, எழுத்துத்துறையை பற்றியே மட்டுமாகும். அவ்வளவுக்கு எழுத்தை நேசித்தார். தனக்கு நடக்கப் போகும் இறுதிக்கட்டத்தை உணர்ந்து தன் பிள்ளைகளுடன் அவற்றை பகிர்ந்து பொறுப்புக்களை ஒப்படைத்த தீர்க்கதரிசியாகவும் அவரை நான் காண்கிறேன்.

"தோன்றிப் புகழுடன் தோன்றுக...." என்னும் வள்ளுவரின் வாக்கிற்கு ஏற்ப வாழ்ந்த மாமனிதர். அவர் அன்னாரின் ஆத்மா சாந்திபெற அஞ்சலிகள் கூறுவதோடு, அன்னாரின் குடும்பத்தாருக்கும் எனது அனுதாபங்களையும் ஆறுதல்களையும் கூறிக் கொள்கின்றேன்.

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

**திரு. செ. கலையரசன்**
அதிபர்
கமு/ உவெஸ்லி உயர்தரப்பாடசாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலாபூஷணம் முருகேசு சடாட்சரம்.

இலக்கியப்பேராசான் முருகேசு சடாட்சரம் எனது இலக்கிய வளர்ச்சிக்கு வழிகாட்டியாக இருந்தார். முன்னோடியாக இருந்தார். அன்னாரின் இல்லம் சென்று என்னுடைய சிருஷ்டிகளைக் கொடுப்பேன். திருத்தங்கள் செய்து செப்பனிட்டுத்தருவார்.

தினபதி பத்திரிகை கவிதா மண்டலம் வெளிவந்த காலத்தில், புலவர்மணி ஆ. மூ. ஷரிபுத்தீன், பாண்டியூரன், நீலாவணன், யுவன் ஆகியோருடன் சடாட்சரம் ஐயா அவர்களுக்கும் எனது கவிதை எழுச்சிக்கும் உறுதுணையாக இருந்தார். மேலும், அன்னாரின் இரண்டு சிறுகதைகளை ஆங்கிலமொழியில் மாற்றம் செய்தேன் - அவை டெய்லிநியூஸ் பத்திரிகையில் பிரசுரம் பெற்றன.

மேலும் அவரை அன்னாரின் இல்லத்தில் அடிக்கடி சந்தித்து, எனது கவிதைகளைச் செப்பனிட்டுக்கொள்வேன்.


இலக்கியப் பேராசான் முருகேசு சடாட்சரம் இலக்கிய வானிலே இலங்கிடும் நிலை பெற்றார்.
செப்பமான பாப்புனைந்து சிந்தனைக்கு உயிர் கொடுத்தார்.
தப்புக்களும் பொய்ப்புரட்டும் பிரபஞ்சப்பெரும்பரப்பில்
சஞ்சலங்கள் செய்ததனை வண்மையாகக்கண்டித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வஞ்சனையும் வன் செயலும் வாஞ்சைவளர்ந்திடுமோ?
வான்பரப்பில் வெண்ணிலவு ஒளிப்புனலைப்பாய்ச்சுவதால்.
தேன் சிந்தும் சிந்தனைகள் சுரந்துவரும் மெய்தானே!
மாண்புடனே வாழ்ந்தவரைக்காலன் கவர்ந்துகொண்டான்
சான்றோரின் பட்டியலில் சங்கமித்தார் சடாட்சரமே!
கண்ணீரும் துயரங்களும் மேலோங்கிவிட்டதனால்
சென்னியிலே சாந்தி நிலை சாய்ந்து போனதுவெ!

புன்னகைவேந்தன்
கலாபூஷனம்
**அ.மு. பாறுக் JP(WI)**
மருதமுனை
*10.07.2024*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறைந்தும் மறையாத ஐயா...

ஈழத்து இலக்கிய வரலாற்றில் பலராலும் நன்கு அறியப்பட்ட கலாபூசணம் கவிஞர் மு. சடாட்சரம் அவர்கள் அமரராகி விட்டாரென்ற துயரச்செய்தி கேள்வியுற்று மிகவும் வேதனையடைந்தேன். *1984* காலப்பகுதியில் அன்னாருடன் எனக்கிருந்த உறவு அவரது இறப்புவரை நீடித்தது. சமீபகாலமாக அவர் நோய்வாய்ப்பட்டிருந்த போது கல்முனைக்கு நான் செல்லும் வேளை அவரையும் அடிக்கடி சென்று பார்த்துச்செல்லுவேன்.


மூத்தபெருங்கவிஞரான அவர் கமு / பெரிய நீலாவணை சரஸ்வதி வித்தியாலயத்தில் அதிபராக இருந்தபோது அவரது அழைப்பின் பேரில் அங்கு கல்வி கற்பித்தது என் வாழ்வில் ஒரு மறக்கமுடியாத அனுபவமாகும். அவருடைய இல்லத்துக்கு நான் செல்லும் போதெல்லாம் சுவையான தேனீருடன் எம்மிருவருக்கும் கதைதொடங்கும். அது இரவாகியும் நீடிக்கும். அமைதியான சுபாவமுடைய ஐயா யாருக்கும் கடிந்து பேசயதையோ யாரையும் பகைத்துக்கொண்டதையோ நான் காணவில்லை என்பதுடன் மிக பண்போடு பழகியதால் எல்லோருமே ஐயா என்றேதான் விழித்தழைப்பது வழமையாகும். பெரிய நீலாவணையில் எனது முதல் கவிதை நூலான "கிடுகுவீடு" வெளியீட்டு நிகழ்வில் அவரால் இயலாதபோதும் கூட கலந்து கொண்டு என்னைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமைப்படுத்தினார். அத்துடன் அவரை அவ்விழாவில் கௌரவிக்கக் கிடைத்த சந்தர்ப்பத்தை எனக்கு கிடைத்த பெரும் பாக்கியமாகக் கருதுகிறேன். வாழும்போதே அவரை வாழ்த்தக் கிடைத்தமை எனக்கு கிடைத்த அரிய வாய்ப்பாகும். இனிமையாகவும் காசியமாகவும் பேசக்கூடிய அவரின் இறப்பு தமிழ் இலக்கிய உலகிற்கு ஒரு ஈடிணையற்ற இழப்பாகும். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்வதுடன் அவரது ஆத்மா இறையடி சாந்தியடைய இறைவனைப் பிராத்திக்கிறேன்.

**சி. சுதாகரன்**
(நீலையூர் சுதா)
மாகாண மீன்பிடிப்பணிப்பாளர்
கிழக்குமாகாணம்
திருகோணமலை.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சடாட்சரன் பாதம் சரணடைந்தனையோ...!

கல்முனை பதிவாழ்ந்த கருணைமிகும் தம்பதியர்
இல்வாழ்வில் பெற்றெடுத்த இன்பமகன் சடாட்சரன்
எண்பத்து நான்கு ஆண்டுகள் வாழ்ந்தபின்
மண்ணுலகம்விட்டு விண்ணுலகம் பறந்தனனே!
ஆருயிர் மனைவியையும் அருமைப்பிள்ளைகளும்
உற்றார் உறவினர்கள் மற்றுமுள்ளயாபேரும்
பெரியநீலாவணையாம் பேரூரில் உமைஇழந்து
துயரத்தால் துவண்டு அழசுவர்க்கபதிசென்றனையோ!

ஆசான், அதிபராய் அளப்பெருந்தொண்டாற்றி
பாசமிகும் மாணவரை பலதுறையும் உருவாக்கி
உதவிக்கல்விப்பணிப்பாளராய் ஊக்கமுடன் செயற்பட்டு
ஓய்வுநிலை அடைந்திட்ட உயர்ந்த பண்பாளரிவர்
போய்விட்டார் இறையோனின் பொன்னுலகைக்காண்பதற்கு!

நீலாவணன் தலைமையில் ஆயிரத்துத்தொளாயிரத்தறுபத்
- தேழில்
கல்முனையில் உருப்பெற்ற எழுத்தாளர் சங்கத்திலே
உறுப்பினராய்ச் செயற்பட்டு உவப்போடுபடைத்த
“பிடிப்பு” எனும் தலைப்பினிலே மலர்ந்த சிறுகதை
எழுத்தாளர் சங்கபாடும் மீன் முதற்சஞ்சிகையில்
பிரசுரமானது இவர் எழுத்துக்கு முதல் வெற்றி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதை சிறுகதை உருவகம், கட்டுரையென
காலத்தால் அழியாத ஆக்கங்கள் பலவற்றை
ஞாலத்தில் படைத்து நன்மதிப்பை பெற்றதுடன்
"பாதைபுதிது" எனும் கவிதைத்தொகுதியிலும்
நாற்பத்திரண்டு கவிதைகளைத்தந்துள்ளார்.
சடாட்சரன் கவிதைகள் ஈழத்தின் பிரபல
பத்திரிகைளில் மட்டுமன்றி தமிழகச்சஞ்சிகையாம்
கணையாழி, கலைமகள் முதலியவற்றிலும்
வெளிவந்ததெல்லாம் இவர்கவிதைச் சிறப்புக்களே!

"நித்திரையில் தோன்றும் நித்திலமேவாராய்
சத்தியமாய் உன்நினைவால்வாடுகிறேன் பாராய்"
என்று இலங்கை வானொலியிலே இசைக்கின்ற மெல்லிசையால்
வலம்வரும் இவரது பாடல் சிறப்பெனலாம்
"மேட்டுநிலம்" என்னும் சிறுகதைத் தொகுதியில்
காட்டிய பதினொரு வகைசிறுகதைககளும்
எமது மண்ணிலே வாழும் மாந்தர்பலரும்
தமது வாழ்விலே பெற்ற அழியாத ஓவியங்கள்
படிக்கப்படிக்க வாழ்வின் தத்துவத்தை
வடித்துக்காட்டும் அழகானபிம்பங்கள்
கவியரங்கம் என்றால் சடாட்சரன் அங்கிருப்பார்
புவியோர்க்குப்புத்தூக்கம் பூத்திடக்கவிசொல்வார்
அரங்கத்தலைவர் மட்டுமல்ல, கவிபாடும்
ஒருவராகவும் அமர்ந்து உன்னத கவிசொல்வார்
ஆயிரத்தொளாயிரத்தென்பத்தேழில்
கவிஞர் ஜீவா ஜீவரெத்தினத்தின் தலைமையிலே
தறைநீலாவணை கண்ணகி அம்மன் ஆலயத்தில்
"பெண்ணால் உலகெய்தும் பேறு" எனும் தலைப்பினிலே
ஏழு பேர் இணைந்து ஏற்றமிகு கவிசொன்னோம்.
அக்கவியரங்கிலே மு. சடாட்சரனோடிணைந்து
அக்கறையோடு நானும் கவிபாடி பொற்கிழிபெற்றது
எக்காலத்தும் அழியாத உயர்ந்த வரலாறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர் முருகேசு சடாட்சரன் அவர்களின்
அழியாத நினைவுகள் எத்தனையோ எத்தனையோ!
அத்தனையும் இவ்விடத்தே அடக்கிவிடமுடியாது

கண்மூடி மறைந்தாலும் கண்ணுள் மறையாதிருக்கும்
அன்னார் சார்ந்த அனைத்து உள்ளங்களுக்கும்
என்னுடைய ஆழ்ந்த அனுதாபங்கள் தெரிவிப்பதோடு
அமரரின் ஆன்மா சுவர்க்கபதியில் சுகந்தம்பெற்று
சடாட்சரன் பாதங்களில் எப்போதும் இணைந்திருக்க
எல்லாம் வல்ல இறையோனை வேண்டுகின்றேன்.

*ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!*

பாவாணர்
**அக்கரைப்பாக்கியன்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
MARUTHAMUNAI
MUNICIPAL COUNCIL
KALMUNAI

# மெல்லிசைப் பாடல் - 2

## புதுமை பொங்குது...

பொங்குது பொங்குது புதுமையடா
பூமியில் இன்பம் நிறையுதடா
மங்கல வாழ்வு மலருதடா
மடமை இருள்கள் தொலையுதடா

(பொங்குது)

ஓடி உழைக்கும் தொழிலாளர்கள்
உள்ளம் உயர்வைக் காணுதடா
வீடுகள் தோறும் இன்பவிளக்கு
விடிய விடிய எரியுதடா

(பொங்குது)

சேரிகள் நகர மாகுதடர
சிந்தனை புதிதாய் மாறுதடா
மாரி மழைபோல் செல்வமெல்லாம்
மக்கள் உடமை ஆகுதடா

(பொங்குது)

முழுமை நிலவாய் மனிதர்களின்
முகங்களெல்லாம் ஆனந்தம்
எளியவர் வலியவர் இல்லாத
எங்கும் சமத்துவ ஆனந்தம்

(பொங்குது)

எழுதப்பட்ட 2 ஆவது மெல்லிசைப் பாடல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்து நவீன இலக்கியத்துறையில் தனி முத்திரை பதித்தவர் கவிஞர் மு. சடாட்சரன்.

ஈழத்து நவீன தமிழ் இலக்கிய வளர்ச்சியில் தனக்கென தனி முத்திரை பதித்தவர். கிழக்கிலங்கையின் புகழ்பூத்த கவிஞர்களுள் ஒருவராக விளங்கியவர் மூத்த கவிஞர் கலாபூசணம் மு. சடாட்சரன் என்று சொல்ல முடியும். இவர் கவிஞர் மட்டுமல்ல பாடலாசிரியர், நாடகக்கலைஞர், விமர்சகர், திறனாய்வாளர், எழுதுவினைஞர், ஆசிரியர், அதிபர், உதவிக்கல்விபணிப்பாளர், மனிதாபிமான செயற்பாட்டாளர் என பல்வேறு துறைகளில் கால்தடம் பதித்து சிறப்பாக தமது பணியினை செய்த பல்துறை வித்தகராக மறைந்த மூத்த கவிஞர் மு. சடாட்சரன் திகழ்ந்தார்.

மேட்டுநிலம் சிறுகதைத் தொகுதி, புதிய பாதை கவிதைத் தொகுதி ஆகிய இரு நூல்களை வெளியிட்டு சாகித்தியவிருது, ஹோடேகே தேசிய விருது, சிறந்த தேசிய நூல் விருது என பல விருதுகளையும் பலரதும் பாராட்டையும் பெற்றவர். அத்துடன் வித்தகர் விருது, கலாபூஷணம் விருது, கொழும்பு கம்பன் கழகத்தின் மகரந்த சிறகு விருது ஆகியவற்றையும் பெற்றுள்ளார். கிழக்கின் கவிச்சக்கரவத்தியாக திகழ்ந்த கவிஞர் நீலாவணனின் அன்புக்கு பாத்திரமானவர்.

அவரோடு **15** வருடங்கள் நெருங்கிப் பழகி இலக்கிய சேவைகள் செய்தவர். **65** ஆண்டுகளுக்கு மேலான இலக்கிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுபவம், மரபுசார் இலக்கியப் புலமை, பதியவடிவங்களின் நு/ட்பங்களைப் புரிந்து கொண்டு செப்பமாகக் கையாளத்தக்க ஆற்றல் ஆளுமை என்பன வாய்க்கப்பெற்றவர். தனது படைப்புகளில் வாழ்வியலை, சமூக மறுமலர்ச்சியை, மானுட சூழலை கலைநயத்தோடு தருபவர். இவருடைய கவிதைகள் குறியீட்டுப்பாங்கில் படிமச் செழிப்போடு அமைந்துவருபவை என திறனாய்வாளர்கள் குறிப்பிடுவர். இயல்பான மொழிநடை அவருடையது.

எனது நினைவுகள்.......

கவிஞருக்கும் எனக்குமான தொடர்புகள் குடும்ப உறவுகளாக தொடர்கின்றது, அவரது வீட்டு முற்றத்தில் மாலை 04 மணிக்குப்பின் தொடரும் சந்திப்பு இரவு 08 மணியை தாண்டியும் நகர்ந்து செல்லும். கலை, இலக்கியம், அரசியல் தனிப்பட்ட வாழ்வியல் என பல்வேறு தளங்களில் எங்கள் சம்பாசனை தொடரும். எங்கள் சம்பாசனைக்கு நடுவில் அவரது மனைவி பாக்கியம் அம்மா கொண்டு வைக்கும் சூடான தேனீர் மேலும் உற்சாகத்ததை தரும். பத்தும் பலதும் பேசி சத்தமாய் சிரிப்போம், மகிழ்ச்சியில் திளைத்திருப்போம்.

நான் எழுதிய பல கவிதைகளை இலக்கிய செழுமையோடு திருத்தியமைத்து தருவார். நான் எழுதி வெளியிடவுள்ள கவிதைத்தொகுதிக்கு "புதிதாய் பிறப்போம்" என்னும் பெயர் சூட்டியவர். என்னால் வெளியிடப்படும் விருந்து சஞ்சிகைக்கு பிரதம ஆலோசகராக இருந்து வழிகாட்டியவர். "விருந்து" என்ற பெயரை சஞ்சிகைக்கு வைத்தவரும் அவரே. இவை எல்லாவற்றையும் விட் 2000 ஆம் ஆண்டில் என்னால் ஆரம்பிக்கப்பட்ட அகரம் சமூக அமையம் எனும் அமைப்பின் முதலாவது அங்குரார்ப்பண நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு நிகழ்வை சிறப்பித்தவர் என்ற பெருமை எனக்குண்டு. கலை, இலக்கியம் என்ற ரீதியில் எனக்கும் அவருக்கும் இடையில் 24 வருடங்கள் தொடர்பு




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கிறது. கவிஞரின் புதிய பாதை எனும் கவிதைத் தொகுதியை 2012இல் என்னால் நடத்தப்பட்ட "அகரம்" அமைப்பின் மூலம் வெளியிட்டு வைத்தமையை பெரும் பாக்கியமாக கருதுகின்றேன்.

மறக்கமுடியாத மாமனிதராக மூத்த கவிஞர் மு. சடாட்சரன் இருக்கின்றார். எனக்கு தந்தையாக, அண்ணனாக, நண்பனாக இருந்து வழிகாட்டிய ஒருவரை இழந்து தவிக்கின்றேன். அவரது வெளிவராத பலகவிதைகள் கிடப்பில் கிடக்கின்றது. "தம்பி இன்னும் இரு கவிதை நூல்களை வெளியிடவேண்டும் என்பது எனது ஆசை" என அவர் என்னிடம் சொல்லிய வார்த்தைகள் இன்றும் நீங்காமல் ஒலிக்கிறது. அவரது புதிய கவிதை தொகுதி நூல்கள் வெளிவர வேண்டும். அதற்கான முயற்சியில் குடும்பத்தாரின் ஒத்துழைப்புடன் நாமும் ஈடுபட வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன். என் அன்புக்குறிய கவிஞர். மு. சடாட்சரம் ஐயாவின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை பிராத்தனை செய்கின்றேன்.

ஊடகவியலாளர்
"அகரம்"
**செ. துஜியந்தன்**
*13-07-2024*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவுகளின் நிழல்கள்...

மருமக்களின் குமுரல்.....

ஐயா சடாட்சரமே ! எங்கள்
அன்பிற்குறிய தாய் மாமாவே..
நீர் எங்களை விட்டு மேலோகம்
சென்றது ஏன் ஐயா!...
மாமாவாக நின்று...
வழிநடத்தினீரே ஐயா! மறுபுறம்
ஆசானாக இருந்து....
அறிவுட்டினீரே ஐயா! நீர்
காட்டிய பாதை வழியே - நாங்கள்
நல் வாழ்வு வாழ - நீரோ
எங்களை விட்டு பிரிந்து சென்றது - ஏன் ஐயா!
எமன் அழைத்தானோ ! காலம் சென்று விட்டதோ!
உன் இழப்பினால் எங்களை - துயரில்
மூழ்கடித்து சென்று விட்டீரே - ஐயா!
உன் ஆத்மா சாந்தி வேண்டி - பிராத்தித்து
நிற்கின்றோம் உன் அன்பு மருமக்கள்.

**கலாவதி, கலாமணி, சசிகலா,**
**கலைவாணி, கலாராணி,**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூத்த தங்கையின் குமுறல்......

பாசத்தின் பிறப்பிடமே - பண்பின்
உறைவிடமே. தாயின் - தலைமகனே
என் முன் தரணியில் உதித்தவனே
என் தமையனாகவும் தந்தையாகவும் - இருந்து
என் வாழ்விற்கு ஒளி ஏற்றிய - சகோதரனே
நான் நோயுற்ற காலத்தில் - உன்
இயலாமை பாராது எனக்கு ஆறுதல் - கூறினாயே
இன்று ஆறாத துயரத்தில் என்னை ஆழ்த்தி - விட்டு
வெகுதூரம் சென்றது ஏன் - ஐயா
உன் ஆத்மா சாந்தி வேண்டி நிற்கும் - இவள்

உன் தங்கை
**குணரெத்தினம்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐயாவின் நினைவுகள்...

ஐயா என்றால்
மலர்ந்த முகத்துடன்
என்னை நலன்கேட்பாய்
நிமிர்ந்த நடை
நேர் கொண்டபார்வை
கம்பீரமான பேச்சு
அன்பாக பழகும் தன்மை
ஆதரிக்கும் பண்பு
வாயார வாழ்த்தி
ஆசி வழங்கும் மனிதர்
அத்தனைக்கும் புகழ்
பூத்த நீங்கள் இன்றோ
அவனியில் இல்லை
நெஞ்சம் கொதிக்குது
நிலை தடுமாறுது
நீங்கள் இல்லா
வீட்டை பார்த்து

**எஸ். பிரியங்கா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன்மொழிகள்...

**சுவாமி விவேகானந்தர் -**

- வலிமையே மகிழ்ச்சிகரமான நிரந்தரமான வளமான அமரத்துவமான வாழ்க்கை
- செயல் நன்று சிந்தித்து செயலாற்றுவதே நன்று. உனது மனதை உயர்ந்த இலட்சியங்களாலும் சிந்தனைகளாலும் நிரப்பு. அவற்றை ஒவ்வொரு நாளின் பகலிலும் இரவிலும் உள்நிறுத்து. அதிலிருந்து நற் செயல்கள் விளையும்.
- பொய் சொல்லி தப்பிக்காதே. உண்மையைச் சொல்லி மாட்டிக் கொள் பொய் வாழவிடாது உண்மை சாகவிடாது.

**பிளேட்டோ -**

- யதார்த்தம் மனதினால் உருவாக்கப்பட்டது நம் மனதை மாற்றுவதன் மூலம் யதார்த்தத்தை மாற்ற முடியும்.
- வறுமை வருவது செல்வம் குறைவதால் அல்ல ஆசைகள் அதிகரிப்பதால்
- தனக்கு என்ன தெரியாது என்பதை அறிந்தவனே புத்திசாலி

**சேகுவேரா -**

- நண்பர்கள் இல்லாதது சோகமான விடயம் ஆனால் எதிரிகள் இல்லாதது இன்னும் சோகமானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அரிஸ்டோட்டில் -**

- கல்வியின் வேர்கள் கசப்பானவை ஆனால் அதன் பழங்கள் இனிப்பானவை.
- நாம் ஒரு இலக்கை அடைய முயற்சிக்கும் போது மட்டுமே நம் வாழ்க்கை அர்த்தமுள்ளதாக இருக்கும்.
- உள்ளுணர்வே அறிவியல் அறிவின் ஆதாரம்.

**சாக்ரடீஸ் -**

- ஆய்வு செய்யப்படாத வாழ்க்கை மதிப்பு மிக்க வாழ்க்கை அல்ல.
- உன் அன்பின் தன்மைக்கு ஏற்றபடி உன் செயல்கள் அமையும்.
- உன் செயல்களுக்கு தன்மைக்கு ஏற்றபடி உன் வாழ்க்கை அமையும்.
- எதையும் உன் சொந்த அறிவு கொண்டு சிந்தி, எதையும் அப்படியே நம்பி விடாதே, ஏன், எதற்கு, எதனால் என்று கேள்வி கேள்

**A.P.J. அப்துல்கலாம் -**

- ஒரு சிறந்த புத்தகம் நூறு நல்ல நண்பர்களுக்கு சமம்.
- நீங்கள் புகழுடன் பிறந்தால் அது ஒரு விபத்து. நீங்கள் புகழுடன் இறந்தால் அது ஒரு சாதனை.

**பாரதியார் -**

- இயன்றவரை தமிழே பேசுவேன் தமிழே எழுதுவேன். சிந்தனை செய்வது தமிழிலே செய்வேன்.
- உள்ளத்தில் நேர்மையும் தைரியமும் இருந்தால் நடக்கும் பாதையும்நேராக இருக்கும்.
- துன்பம் நேரும் சமயத்தில் அதைக் கண்டு சிரிக்கப் பழகுங்கள். அதுவே அத்துன்பத்தை வெட்டும் வாளாகி விடும்.
- எப்போதும் மலர்ந்த முகம், இனிய சொல், தெளிந்த சிந்தனை இவற்றோடு இருப்பேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருட புராணமும் தண்டனைகளும்...

**கால சூத்திரம்** -

- **குற்றம்** - பெரியோர்களை பெற்றோர்களை அடித்து அவமதித்தல், பட்டினிபோடுதல்.
- **தண்டனை** - அதே முறையில் அடி, உதை பட்டினி என்று வதைக்கப்படுவர்.

**அறித்தாமிஸ்ர நரகம்** -

- **குற்றம்** - கணவனும் மனைவியும் சேர்ந்து வாழாமல் ஒருவரை ஒருவர் ஏமாற்றுதல், கணவன் மனைவியை வஞ்சிப்பது, மனைவி கணவனை வஞ்சிப்பது.
- **தண்டனை** - கண்கள் செயல் இழந்து இருள் சூழ்ந்த இடத்தில் தவிக்க விடப்படுவர்.

**அக்கினி குண்டம்** -

- **குற்றம்** - பிறருக்கு உரிமையான பொருட்களை அபகரித்து வாழ்தல். பலாத்காரமாக தனது காரியங்களை நிறைவேற்றி கொள்ளுதல்.
- **தண்டனை** - பாவிகள் ஒரு நீண்ட தடியில் மிருகத்தைப் போல கைகால்கள் கட்டப்பட்ட நிலையில் எரியும் அக்கினி குண்டத்தில் வாட்டி எடுக்கப்படுவார்கள்.

**வைதரணி** -

- **குற்றம்** - நல்வழியில் செல்லாமல் தர்மத்திற்குப் புறம்பாக நடத்தல்.
- **தண்டனை** - வைதரணி என்ற இரத்தமும், சீழும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுநீரும், மலமும் கொடிய பிராணிகளும் இருக்கும் நதியில் பாவிகளை விழவைத்து துன்புறுத்துவர்.

**ரௌரவ நரகம் -**

- **குற்றம்** - பிறருடைய குடும்பத்திற்கு கேடு விளைவித்து அழிப்பதும், அடுத்தவர் பொருளைப் பறித்தலும்.
- **தண்டனை** - சூலாயுதம் கொண்டு துன்புறுத்தப் படுவர்.

**சாரமேயாதனம் -**

- **குற்றம்** - வீடுகளுக்கு தீவைத்தல், சூறையாடுதல், உயிர்களை வதைத்தல், விஷத்தைக் கொடுத்துக் கொல்லுதல், மக்களைக் கொன்றுகுவித்தல்.
- **தண்டனை** - விசித்திரமான கொடிய மிருகங்களால் பாவிகள் வதைக்கப்படுவர்.

**தாமிஸிர நரகம் -**

- **குற்றம்** - பிறருக்குச் சொந்தமான மனைவியை விரும்புதல் அல்லது அபகரிக்க நினைத்தல் அல்லது பிறரது பொருளை அபகரித்தல்.
- **தண்டனை** - முள்ளாலான கட்டைகளாலும் சுதைகளாலும் அடிப்பார்கள்.

**பன்றிமுகம் -**

- **குற்றம்** - குற்றமற்றவர்களை தண்டித்தல், நீதிக்குப் புறம்பாக அநீதிக்குத் துணைபோதல்.
- **தண்டனை** - பன்றி முகத்துடன் கூர்மையான பற்கள் உள்ள ஒரு மிருகத்தின் வாயில் அகப்பட்டு கூர்மையான பற்களால் கடிக்கப்பட்டு பாவிகள் தண்டனையை பெறுவார்கள்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனனம் முதல் இறப்பு வரை

*(அப்பாவிற்கு பிடித்த பாடல்)*

ஜென்மம் நிறைந்தது சென்றவர் வாழ்க
சிந்தை கலங்கிட வந்தவர் வாழ்க
நீரில் மிதந்திடும் கண்களும் காய்க
நிம்மதி நிம்மதி இவ்விடம் சூழ்க
ஜனனமும் பூமியில் புதியது இல்லை
மரணத்தை போல்லொரு பழையதும் இல்லை
இரண்டும் இல்லாவிடில் இயற்கையும் இல்லை
இயற்கையின் ஆணைதான் ஜனனத்தின் எல்லை
பாசம் உலாவிய கண்களும் எங்கே
தேசம் அளாவிய கால்களும் எங்கே
தீ உண்டதென்றது சாம்பலும் எங்கே
கண்ணில் தெரிந்தது காற்றுடன் போக
மண்ணில் பிறந்தது மண்ணுடன் சேர்க
எலும்புசதை கொண்ட உருவங்கள் போக
எச்சங்களால் அந்த இன்னுயில் வாழ்க
பிறப்பு இல்லாமலே நாளொன்றுமில்லை
நேசத்தினால் வரும் நினைவுகள் தொல்லை
மறதியைப்போல் ஒரு மாமருந்தில்லை
கடல் தொடும் ஆறுகள் கலங்குவதில்லை
தரைதொடும் தாரைகள் அழுவதும் இல்லை
நதிமழை போன்தே விதியென்று கண்டும்
மதிகொண்ட மானுடர் மயங்குவதென்ன
மரணத்தினால் சில கோபங்கள் தீரும்
மரணத்தினால் சில சாபங்கள் தீரும்
வேதம் சொல்லாததை மரணங்கள் கூறும்
விதை ஒன்று வீழ்ந்திடில் செடி வந்து சேரும்
பூமிக்கு நாமொரு யாத்திரை வந்தோம்
யாத்திரை தீருமுன் நித்திரை கொண்டோம்
நித்திரை போவது நியதி என்றாலும்
யாத்திரை என்பது தொடர்கதையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்றலின் பூங்கரம் தீண்டிடும் போது
சூரியக் கீற்றொளி தோன்றிடும் போதும்
மழலையின் தேன்மொழி செவியுறும் போதும்
மாண்டவர் எம்முடன் வாழ்ந்திடக் கூடும்

மாண்டவர் சுவாசங்கள் காற்றுடன் சேர்க
தூயவர்க் கண்ணொளி சூரியன் சேர்க
பூதங்கள் ஐந்திலும் பொன்னுடல் சேர்க
போனவர் புண்ணியம் எம்முடன் சேர்க

(ஜென்மம்)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


ஈழத்தின் நவீன கவிதை முன்னோடிகளில்
முக்கியமானவர் மூத்த கவிஞர் மு.சடாட்சரன்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




PUBLIC LIBRARY
MARUTHAMUNAI
MUNICIPAL COUNCIL
KALMUNAI



**"பாதைபுதிது" புத்தக வெளியீட்டு விழாவிற்கு அழைக்கப்பட்ட அததீகள் வரவேற்பின் போது**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அகரம் அமைப்பினால் விழா நாயகனுக்கு பொன்னாடை
போர்த்தி கௌரவிக்கப்பட்ட போது




திரு. மு. சடாட்சரம் அவர்களினால் தனது நூலிற்கு
ஏற்புரை வழங்கிய போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பாதை புதிது வெளியீட்டு விழாவில் பிரதியை அவரது இரண்டாவது சகோதரி பெற்றுக்கொண்டபோது




பாதை புதிது வெளியீட்டு விழாவில் திரு. மு. சடாட்சரம் அவர்களினால் பேராசிரியர் மௌனகுருவிற்கு பிரதி வழங்கப்பட்டபோது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"முக்கியமானது அவர் தமது சமகால எழுத்தாளர்களிடமிருந்து வேறுபட்ட, தனித்துவமான சிறுகதைகளை எழுதி வந்திருப்பவர் என்பதை இத்தொகுப்பு இனம் காட்டுவது உண்மை.

இத்தொகுப்பிலுள்ள பெரும்பாலான சிறுகதைகள் புதிய களத்தை அறிமுகம் செய்கின்றன. புதிய அனுபவங்களை ஏற்படுத்துகின்றன. புதிய செய்திகளை வழங்குகின்றன."

நூல் முன்னுரையில்:
கலாநிதி. செ. யோகராசா அவர்கள்
மொழித்துறை
கிழக்குப் பல்கலைக் கழகம்,
செங்கலடி.

நன்றி.

கலை இலக்கிய நண்பர்கள்
கல்முனை.
05.12.2009

மு. சடாட்சரன் அவர்களின்

**மேட்டு நிலம்** சிறுகதைகள்

## அறிமுக நிகழ்வு

நீரவைப் புத்தகப் பூங்கா வெளியீடு




11.12.2009
வெள்ளி
பிற்பகல் 4.00 மணி

இடம்:
கிறிஸ்த இல்ல
மண்டபம்,
கல்முனை.

*தங்களை அன்புடன் அழைக்கிறோம்.*

கலை இலக்கிய நண்பர்கள்,
கல்முனை.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கல்முனை கலை இலக்கிய நண்பர்கள் அமையத்தின் ஏற்பாட்டில் கவிஞர் மு. சடாட்சரன் எழுதிய மேட்டு நிலம் சிறுகதை தொகுதியின் அறிமுகவிழா அண்மையில் கல்முனையில் இடம்பெற்ற போது இந்நூலின் முதற்பிரதியை கவிஞர், சண்முகம் சிவலிங்கம் திருமதி அழகேஸ்வரி நீலவண்ணனுக்கு வழங்குவதையும், உமாவரதராஜன், உரையாற்றுவதையும் படங்களில் காணலாம்.

**வீரகேசரி - 26-12-2009, 4ம் பக்கம்**



...லாவண்ணன் காவியங்கள்' நூல் அறிமுக விழா கடந்த சனிக்கிழமை கல்முனை திரு இருதயநாதர் மண்டபத்தில் அதிபர் திருமதி சிவமணி நற்குணசிங்கம் தலைமையில் நடை... ...ஜ் கோபாலகிருஷ்ணன் (செங்கதிரோன்), ஊடகவியலாளர் செல்லையா பேரின்பராஜா, எஸ்.எழில்வேந்தன் ஆகியோர் உரையாற்றுவதையும், தொழிலதிபரும் பேராசிரியருமான ஏ... ...ந்து முதற்பிரதியைப் பெறுவதையும், கலாநிதி [illegible], எழுத்தாளர் உமா வரதராஜன், கவிஞர் மு.சடாட்சரம் ஆகியோர் அருகில் நிற்பதையும் படங்களில் காணலாம். (ம...)

**சுடரொளி - 04-07-2012**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்முனை வலயக் கல்வி அலுவலகத்தில்
உதவிக்கல்விப்பணிப்பாளராக இருந்தபோது



கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் நிசாமுடன்



பெரிய நீலாவணை விஸ்ணு மகாவித்தியாலய விளையாட்டு
விழாவிற்கு அதிதிகள் வரவளைக்கப்பட்ட வேளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கமு/ சேனைக்குடியிருப்பு கணேஷா மகா வித்தியாலயத்தில் இடம்பெற்ற சித்திரக்கண்காட்சியில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு சிறப்பித்தவேளை



கமு/கமு/ சேனைக்குடியிருப்பு கணேஷா மகாவித்தியாலயத்தில் இடம்பெற்ற சித்திரக்கண்காட்சியை பார்வையிட்டவேளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தனது உதவிக்கல்விப்பணிப்பாளர் பதவியில் இருந்து
ஓய்வு பெறும் போது




கவிஞர் மருதூர் கொத்தனின் புத்தக வெளியீட்டுவிழாவில்
நூல் பற்றிய அணிந்துரையாற்றிய போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கமு/பாண்டிருப்பு மகா வித்தியாலயத்தில் உதவி அதிபராக இருந்த போது



பாண்டிருப்பு மகாவித்தியாலயத்தில்
பிரதி அதிபர் மு. சடாட்சரம் மாணவர்களால்
மாலையிட்டு வரவேற்கப்பட்ட வேளை



கமு/பாண்டிருப்பு மகா வித்தியாலயத்தில்
இடம்பெற்ற பரிசளிப்பு விழாவின் போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# රාජ්‍ය සාහිත්‍ය සම්මාන උළෙල 2013



සංස්කෘතික කටයුතු දෙපාර්තමේන්තුවේ පරිත්‍යාගයකි



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மாகாணக்கல்வித் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட
சித்திரக்கண்காட்சியில் ஓய்வுபெற்ற உதவிக் கல்விப்
பணிப்பாளர் திரு. மு. சடாட்சரம் பங்கு பற்றிய போது



14/03/1993 இல் அகில இலங்கை சாஸ்தடத பீடமும்
முத்தமிழ் சங்கமும் இணைந்து " கலைச்செல்வர்"
பட்டம் வழுங்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் கலைஞர்களுக்கான அரச விருது

## விமர்சனங்களுக்கு இடையே ஒரு புதிய முயற்சி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்முனை உவெஸ்லி உயர்தரபாடசாலை
## வாணி விழா - 2007






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





கலைக்குருசில் பட்டம்
வழங்கப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச இலக்கிய விருது விழா 2013





அரச இலக்கிய விருது 2013 விழா கடந்த 30ஆம் திகதி பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. வைபவத்தில் இலங்கையின் நவீன தமிழ் இலக்கிய முற்போக்கு எழுத்தாளர் தெணியானுக்கு (கந்தையா நடேசு) பிரதம விருந்தினராக கலந்து கொண்ட சபாநாயகர் சமல் ராஜபக்ஷ 2013 சாஹித்திய ரத்னா உயர் விருது வழங்கிவைப்பதையும் சிறந்த சிறுகதைக்கான விருதை தேவமுகுந்தன், சிறந்த கவிதைக்கான விருதை முசட்டாட்சரம், சிறந்த மொழிபெயர்ப்பு நாவலிதவிருதை இராசையா சடகோபன், சிறந்த மொழிபெயர்ப்பு இளையோர் நாவல் விருதை மடுளுகிரியே விஜேயரத்ன, சிறந்த சிறுகதை மொழிபெயர்ப்பு விருதை திக்குவல்லை கமல், சிறந்த நாவலுக்கான விருதை கு.இராயப்பு (கலையார்வன்) சிறந்த நானாவித இலக்கிய விருதை பேராசிரியர் என். ஞானகுமாரன் ஆகியோர் அமைச்சர் ரீ.பி. ஏக்கநாயக்க, பேராசிரியர் கார்லோபொன்சேகா ஆகியோரிடம் பெற்றுக்கொள்வதையும் இலக்கிய நண்பர்கள் எடுத்துக் கொண்ட படத்தினையும் காணலாம். (படங்கள்: எஸ்.எம்.சுரேந்திரன்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 15 ஆவது கொடகே தேசிய சாகித்திய விருது விழா - 2013



தேசிய சாகித்திய விருதுவிழா அண்மையில் இலங்கை மன்றக் கல்லூரியில் பேராசிரியர் விமல் டி பலகல்லே தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. [illegible] சிங்கள, தமிழ், ஆங்கில இலக்கியவாதிகள் மூவர் வாழ்நாள் கௌரவ சாகித்திய விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். அவ்வேளை தம் [illegible] பரிசு பெற்ற சிங்கள, தமிழ், ஆங்கில எழுத்தாளர்களுக்கு பரிசும் விருதும் வழங்கப்பட்டன. எழுத்தாளர்கள் பரிசும் விருதும் பெறுவதையும் [illegible] குமாரசிங்க [illegible] விமல் டி பலகல்லே குத்து விளக்கேற்றுவதையும், விழாவில் கலந்துகொண்டவர்களில் ஒரு [illegible] வாழ்நாள் சாகித்திய விருது பெற்ற மூத்த பத்திரிகையாளரும் எழுத்தாளருமான திருமதி. அன்னலட்சுமி இராஜதுரைக்கு எழுத்தாளர் திருமதி [illegible] பொன்னாடை அணிவிப்பதையும், அருகில் கொடகே தம்பதிகள் நிற்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்: கே. சஜீவகுமார்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Album

Metro News
Monday, October 26, 2009 17





..சிப்பு மாதத்தை முன்னிட்டு மருதமுனை அல்மதீனா வித்தியாலயத்தில் கடந்த வாரம் நடைபெற்ற வாசிப்பை நேசிப்போம் என்ற தலைப்பில் நடைபெற்ற வைபவத்தில் புதிர்ப்போட்டி ..ழ்வில் மாணவர்கள் புதிர்ப்போட்டியில் விடைகளைப் போடுவதையும் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட ஓய்வுபெற்ற உதவிக் கல்விப்பணிப்பாளரும் மூத்த கவிஞருமான ..ம்.சடாட்சரன் மாணவர்களுக்கு பரிசு வழங்குவதையும், அதிபர் ஏ.ஆர்.நிஃமத்துல்லாஹ் ஆகியோரையும் மாணவர்களையும் படங்களில் காணலாம். படங்கள்: பி.எம்.எம்.ஏ.காதர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










இலக்கிய உலகில் பெற்றுக்கொண்ட கேடயங்கள் சில



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
















**இலக்கிய உலகில் பெற்றுக்கொண்ட சான்றிதழ்கள் சில**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சித்திரக்கலைஞரினால் வாழை மடலில் வரையப்பட்ட சித்திரம்



தனது புகைப்படத்தை
தானே வரைந்தவேளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'விருந்து' சஞ்சிகை அறிமுக விழா

03.03.2017 தினகரன் – கலைச் சுதம்பம்



உள டகவியலாளரும், பல்துறைக் கலைஞருமான பாண்டிருப்பு எஸ்.துஷ்யந்தனை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்துள்ள 'விருந்து' சஞ்சிகையின் அறிமுக விழா அண்மையில் பாண்டிருப்பில் நடைபெற்றது. இதில் மட்டக்களப்பு தாழங்குடா தேசியக் கல்வியற் கல்லூரி உப பீடாதிபதி கே.துரைராஜசிங்கம் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

அதிதிகளாக கவிஞர்களான மு.சடாட்சரன், புன்னகைவேந்தன், கன்னிமுத்து வெல்லபதியான், எம்.எம்.விஜிலி, சமூகசேவையாளர் தோழர் இஸ்மாயில் ஆகியோர் கலந்து கொண்டனர். இங்கு பிரதம அதிதி உப பீடாதிபதி கே.துரைராஜசிங்கம் உரையாற்றுகையில்:

காலத்திற்குக்காலம் எத்தனை சஞ்சிகைகள் வந்தாலும் அவைகள் இடை நடுவில் நின்று போன வரலாறுகளே அதிகம் காணப்படுகின்றன. இதற்கு பொருளாதாரப் பிரச்சினையே காரணமாக அமைகின்றது.இப்போது இலக்கிய ஆர்வம் என்பது மக்களிடம் இருந்து திசைமாறிச் செல்கின்ற நிலையை உணரமுடிகின்றது. இலக்கியப் படைப்புக்களை தொடர்ச்சியாக முன்னெடுத்து வரவேண்டுமாக இருந்தால் இணையத்தளங்களைப் பயன்படுத்த வேண்டியது மிகவும் அவசியமாகும்.காரணம் நூல்கள்,சஞ்சிகைகள் காலக்கிரமத்தில் கறையானுக்கு இரையாகிப்போகின்றன என்பதே உண்மையாகும்.இதற்கான மாற்று வழி இணையங்களிலே இவற்றைப் பதிவு செய்வதாகும் என்றார்.

மூத்த கவிஞர் மு.சடாட்சரன் உரையாற்றுகையில் :

எமது பிரதேச சஞ்சிகைகளை எடுத்துக் கொண்டால் கல்முனைப் பகுதியிலே 1967ஆம் ஆண்டு 'பாடுமீன்'என்ற சஞ்சிகைதான் கவிஞர் நீலாவணனை ஆசிரியராகக் கொண்டு முதலில் வெளிவந்தது.இந்த சஞ்சிகை மிகவும் கோலாகலமாக வெளியிடப்பட்டது.அப்போது அந்த சஞ்சிகையின் விலை நாற்பது சதம் இந்த வரலாற்றை சிலர் மறைக்கின்றார்கள்;

இந்த பாடுமீன் சஞ்சிகையை வெளியிடுவதற்கு கல்முனை தமிழ் இலக்கியக் கழகம் என்ற அமைப்பை உருவாக்கினோம் அந்த அமைப்பின் மூலமே பாடுமீன் சஞ்சிகை வெளியிடப்பட்டது. அந்த அமைப்பின் தலைவராக அமரர் சண்முகம் சிவலிங்கமும் செயலாளராக நானும் செயற்பட்டோம் அந்த சஞ்சிகைக்குச் சந்தா சேர்ப்பதற்கு மிகவும் கஷ்டப்பட்டோம்.

பாடுமீன் சஞ்சிகை வெளியீட்டு விழாவுக்கு அமரர் புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை தலைமைதாங்கினார் மர்ஹூம் எஸ்.எச்.எம்.ஜெமீல் சஞ்சிகையைப்பற்றி பேசினார்.கல்முனையில் பிரபலமான ஆசிரியர் கே.ஆர். அருளையா கல்லூர் பித்தன் என்ற பெயரிலே ஒரு கவிதையை எழுதியிருந்தார் இன்னும் ஒருவர் மேலும் கீழும் என்ற தலைப்பில் மேல்நாட்டு இலக்கியங்களையும் கீழ்நாட்டு இலக்கியமும் என்ற கருத்திலே இலக்கியங்களைப் பற்றி தொடர் கட்டுரை எழுதியிருந்தார்.

இப்படியான இந்த சஞ்சிகைக்கு சந்தா சேர்ப்பதற்கு நானும் அமரர்களான சண்முகம் சிவலிங்கமும்,நீலாவாணனும் கல்முனையில் இருந்து துவிச்சக்கர வண்டியிலே மட்டக்களப்பு வரையும்.கல்முனையில் இருந்து திருக்கோயில் வரைக்கும் சென்று மிகவும் கஷ்டப்பட்டு சந்தா சேர்த்திருக்கின்றோம் ஆனால் இரண்டு இதழ்களோடு அந்த பாடுமீன் சஞ்சிகை நின்றுவிட்டது.



கல்முனையில் பேசப்பட்ட இன்னும் ஒரு சஞ்சிகை இருக்கின்றது 'கவிஞன்' சஞ்சிகை இந்த சஞ்சிகை எம்.ஏ.நுஃமானை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்த கவிதைச் சஞ்சிகை அது 1970ஆம் ஆண்டுக்குப்பிறகுதான் வெளிவந்தது. அதற்குப் பிறகு வியூகம் வந்திருக்கின்றது.அதற்குப்பிறகு மருதமுனையில் இருந்து ஹனைஜப்பு ஹாரியை ஆசிரியராகக் கொண்டு 'முனைப்பு' சஞ்சிகை வந்திருக்கின்றது இதே போன்று இன்னும் சில சஞ்சிகைகள் வெளிவந்து மறைந்திருக்கின்றது.

சஞ்சிகை வெளியிடுவது என்பது மிகவும் சிரமமான காரியமாகும் பல கஷ்டங்களையும், சோதனைகளையும் அனுபவிக்க வேண்டி வரும் இந்த நிலையில் தான் கவிஞர் துஷ்யந்தன் இந்த 'விருந்து'சஞ்சிகையைத் தனிந்து வெளிக்கொண்டு வந்திருக்கின்றார். எதிர்கால சந்ததிக்கு இலக்கிய ஆவணங்களாக இவை பதிவு செய்யப்பட வேண்டும் எனவே 'விருந்து' சிறப்புற அனைவரும் கைகோர்ப்போம் என்றார்.

பி.எம்.எம்.ஏ.காதர்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பாதை புதிது கவிதை நூலுக்கு 2013 அரச
சாகித்திய விருது பெறல்




மகளின் திருமணத்தின் போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மூத்த மகளின்
திருமணத்தில்
ஆசி வழங்கிய
போது



பேத்தியின் பிறந்த நாளின் போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மகளின் திருமணத்தின் போது



மகள் மருமகனுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மகளின் கலை மாமணிப்பட்டமளிப்பின்போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்நாடு

# மூத்த கவிஞர் சடாட்சரன் காலமானார்

சாய்ந்தமருது நிருபர்



கல்முனையை பிறப்பிடமாகவும் பெரிய நீலாவணையை வசிப்பிடமாகவும் கொண்ட நவீன இலக்கிய வளர்ச்சியில் கிழக்கிலங்கையின் புகழ்பூத்த கவிஞர்களுள் ஒருவராக விளங்கிய ஓய்வு நிலை உதவிக் கல்விப் பணிப்பாளர், கவிஞர், கலாபூஷணம் மு.சடாட்சரன் தனது 84 ஆவது வயதில் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

ஈழத்து கலை இலக்கிய பரப்பில் தனக்கென தனி முத்திரை பதித்தவர் மூத்த கவிஞர் மு.சடாட்சரன், அனைவரது பாராட்டையும் பெற்றவர். கிழக்கின் கவிச்சக்கரவர்த்தியாக திகழ்ந்த மறைந்த கவிஞர் நீலாவணனின் பேரன்புக்கு பாத்திரமானவர். தனது வாழ்நாளில் பெரும் பகுதியை எழுத்து மற்றும் கலை இலக்கிய துறைக்காக அர்ப்பணித்தவர். இன்னும் இரு நூல்களை வெளியிட வேண்டும் என முனைப்புடன் செயற்பட்டுவந்தவர். அன்னாரின் இழப்பு ஈழத்து கலை இலக்கிய பரப்பில் பெரும் வெற்றிடத்தை விட்டுச் சென்றுள்ளது.

முஸ்லிம் மாணவர்களுக்கும் தனது கல்வி சென்றடைய வேண்டும் என்பதற்காக கல்முனை ஸாஹிரா தேசிய கல்லூரியில் உயர்தர மாணவர்களுக்கு ஆசிரியராக பணியாற்றியமை மறக்க முடியாத அனுபவமாகவுள்ளது.

# நாடறிந்த மூத்தக் கவிஞர் சடாட்சரன் காலமானார்



ஈழத்து நவீன இலக்கிய வளர்ச்சியில் கிழக்கிலங்கையின் புகழ்பூத்த கவிஞர்களுள் ஒருவராக விளங்கிய ஓய்வுநிலை உதவிக் கல்விப் பணிப்பாளர், கவிஞர் கலாபூஷணம் மு.சடாட்சரன் சனிக்கிழமை(06) தனது 84 ஆவது வயதில் காலமானார்.

கல்முனையை பிறப்பிடமாகவும் பெரியநீலாவணையை வசிப்பிடமாகவும் கொண்ட இவர் ஈழத்து கலை இலக்கிய பரப்பில் தனக்கென தனி முத்திரை பதித்தவராவார். இவர், 'புதிய பாதை' எனும் கவிதை நூல் தொகுதியை வெளியிட்டு அனைவரது பாராட்டையும் பெற்றவர்.

கிழக்கின் கவிச்சக்கரவர்த்தியாக திகழ்ந்த மறைந்த கவிஞர் நீலாவணனின் பேரன்புக்கு பாத்திரமானவர். அவரது பாசறையில் வளர்ந்தவர். அன்று நீலாவணன் எழுதிய 'மழைக்கை' எனும் நாடகத்தில் கர்ணனாக நடித்து அனைவரின் பாராட்டையும் பெற்றவர். தனது வாழ்நாளில் பெரும் பகுதியை எழுத்து மற்றும் கலை இலக்கிய துறைக்காக அர்ப்பணித்தவர். இன்னும் இரு நூல்களை வெளியிட வேண்டும் என முனைப்புடன் செயற்பட்டுவந்தவர்.

அன்னாரின் இழப்பு ஈழத்து கலை இலக்கிய பரப்பில் பெரும் வெற்றிடத்தை விட்டுச் சென்றுள்ளது. கவிஞரின் இறுதி ஊர்வலம் நேற்று ஞாயிற்றுக்கிழமை(07) பெரியநீலாவணையில் நடைபெற்றது. இவர் கவிஞர் நீலாபாலன் (கல்முனை பூபால்) கவிஞர் கலைக் கொழுந்தன் ஆகியோரின் உறவினர் ஆவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்முனை NET

கல்முனை

# நாடறிந்த மூத்த கவிஞர் மு.சடாட்சரன் காலமானார்

வளர்ச்சியில கிழக்கிலங்கையின் புகழ் பூத்த கவிஞர்களுள் ஒருவராக விளங்கிய ஓய்வு நிலை உதவிக் கல்விப் பணிப்பாளர், கவிஞர்,கலாபூஷணம் மு.சடாட்சரன் இன்று தனது 84 ஆவது வயதில் காலமானார்.

கல்முனையை பிறப்பிடமாகவும், பெரியநீலாவணையை வசிப்பிடமாகவும் கொண்டவர்.

ஈழத்து கலை இலக்கிய பரப்பில் தனக்கென தனி முத்திரை பதித்தவர் மூத்த கவிஞர் மு.சடாட்சரன். புதிய பாதை எனும் கவிதை நூல் தொகுதியை வெளியிட்டவர்.

கிழக்கின் கவிச்சக்கரவர்த்தியாக திகழ்ந்த மறைந்த கவிஞர் நீலாவணனின் பேரன்புக்கு பாத்திரமானவர். அவரது பாசறையில வளர்ந்தவர். அன்று நீலாவணன் எழுதிய மழைக்கை எனும் நாடகத்தில் கர்ணனாக நடித்து அனைவரின் பாராட்டையும் பெற்றவர். தனது வாழ்நாளில் பெரும் பகுதியை எழுத்து மற்றும் கலை இலக்கிய துறைக்காக அர்ப்பணித்தவர். இன்னும் இரு நூல்களை வெளியிட வேண்டும் என முனைப்புடன் செயற்பட்டுவந்தவர். அன்னாரின் இழப்பு

பரப்பில் பெரும் வெற்றிடத்தை விட்டுச் சென்றுள்ளது.

கவிஞரின் இறுதி ஊர்வலம் இன்று (07-07-2024) ஞாயிற்றுக்கிழமை பெரியநீலாவணையில் நடைபெறவுள்ளது.

இவர் கவிஞர் நீலா பாலன் ( கல்முனை பூபால் ) கவிஞர் கலைக் கொழுந்தன் ஆகியோரின் உறவினர் ஆவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்து நவீன தமிழ் இலக்கியத்துறையில் தனிமுத்திரை பதித்தவர் மு.சடாட்சரன்

இலங்கையின் தலைசிறந்த நவீன தமிழ் இலக்கியவாதியாகத் திகழ்ந்த கிழக்கிலங்கையின் புகழ்பூத்த மூத்த கவிஞர் கலாபூஷணம் மு.சடாட்சரன் நேற்றுமுன்தினம் சனிக்கிழமையன்று தனது 84 ஆவது அகவையில் காலமானார். அன்னாரின் நல்லடக்கம் நேற்று பெரியநீலாவணையில் இடம்பெற்றது.

இவர் கல்முனையை பிறப்பிடமாகவும், பெரியநீலாவணையை வசிப்பிடமாகவும் கொண்டவர். தனது ஆரம்பக்கல்வியை கல்முனை இராமகிருஷ்ண மிஷன் மகா வித்தியாலயத்தில் கற்றார். உயர்கல்வியை கல்முனை உவெஸ்லி உயர்தரப்பாடசாலையில் கற்றவர் பின்னர் மட்டக்களப்பு ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் இணைந்து பயிற்சிபெற்றார். கவிஞர், பாடலாசிரியர், சிறுகதை ஆசிரியர், சஞ்சிகை ஆசிரியர், நாடகக் கலைஞர், விமர்சகர், திறனாய்வாளர், எழுதுவினைஞர், ஆசிரியர், அதிபர், உதவிக்கல்விப் பணிப்பாளர் என பல்வேறு துறைகளில் கால்தடம் பதித்து சிறப்பாக தமது பணியினை செய்த பல்துறை வித்தகராக மறைந்த மூத்த கவிஞர் மு.சடாட்சரன் திகழ்ந்தார்.



ஈழத்து கலை இலக்கியப் பரப்பில் தனக்கென தனி முத்திரை பதித்தவர் கலாபூஷணம் மு.சடாட்சரன். 'மேட்டு நிலம்' சிறுகதை தொகுதி, 'புதிய பாதை' கவிதை தொகுதி ஆகிய இரு நூல்களை வெளியிட்டு சாகித்திய விருது, கொடகே தேசிய விருது, கிழக்கில் சிறந்த தேசிய நூல் விருது என பல விருதுகளையும் பலரதும் பாராட்டையும் பெற்றவர். அத்துடன் வித்தகர் விருது, கலாபூஷணம் விருது, கொழும்பு கம்பன் கழகத்தின் மகரந்தசிறகு விருது ஆகியவற்றையும் பெற்றுள்ளார்.

1940.05.06 இல் பிறந்த அவருக்கு ஒரு மகன், ஐந்து பெண் பிள்ளைகள் உள்ளனர். இவரது மனைவி அவரது கலைஇலக்கியப் பணிக்கு துணையாக இருந்து ஊக்கியாக செயற்பட்டுள்ளார். தனது இறுதி மூச்சுவரை எழுதுவதையே உயிர் மூச்சாக அவர் கொண்டிருந்தவர். கிழக்கின் கவிச்சக்கரவர்த்தியாக திகழ்ந்த கவிஞர் நீலாவணனின் அன்புக்குப் பாத்திரமானவர். அவரோடு 15 வருடங்கள் நெருங்கிப் பழகி இலக்கிய சேவைகள் செய்தவர். அறுபது ஆண்டுகளுக்கும் மேலான இலக்கிய அனுபவம், மரபுசார் இலக்கியப் புலமை, புதிய வடிவங்களின் நுட்பங்களைப் புரிந்து கொண்டு நன்கு கையாளத்தக்க ஆற்றல், ஆளுமை என்பன வாய்க்கப் பெற்றவர்.

தனது படைப்புகளில் வாழ்வியலை, சமூக மறுமலர்ச்சியை, மானுட நேயத்தை, ஒருமைப்பாட்டை, போரியல் சூழலை கலைநயத்தோடு தருபவர்.


கவிஞர் மு.சடாட்சரனின் இழப்பு கலை இலக்கியப் பரப்பில் ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும்.

**மூத்த இலக்கியவாதியின் மறைவு**

**துஜியந்தன்...**
*(பாண்டிருப்பு தினகரன் நிருபர்)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
MARUTHAMUNAI
MUNICIPAL COUNCIL
KALMUNAI

# மரண அறிவித்தல்

எம்முடன்
1940
-
05
-
06



இறையுடன்
2024
-
07
-
06

கல்முனை 03ஐ பிறப்பிடமாகவும்
பெரியநீலாவணை 01ஐ வசிப்பிடமாகவும் கொண்ட

## அமரர். முருகேசு சடாட்சரம்

ஓய்வு பெற்ற உதவிக்கல்விப்பணிப்பாளர், கலா பூஷணம், கலைமாமணி, கலைக்குரிசில், வித்தகர், கவிஞர்

06.07.2024 ஆம் திகதி சனிக்கிழமை அன்று காலமானார்

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகம்மா, முருகேசு ஆகியோரின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி, மாரிமுத்து ஆகியோரின் அன்பு பெறாமகனும், காலஞ்சென்றவர்களான நல்லதம்பி, பூரணிப்பிள்ளை ஆகியோரின் அன்பு மருமகனும், பாக்கியத்தின் பாசமிகு கணவரும், குணரெத்தினம், மரகதம், செல்வநாயகி ஆகியோரின் பாசமிகு சகோதரனும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை, வன்னமணி ஆகியோரின் பாசமிகு மருமகனும், பார்த்திபன், காலம் சென்ற நவீனன், கீர்த்தினி (ஆசிரியை - பாண்டிருப்பு நாவலர் வித்தியாலயம்), தமிழமுதி, நவநிதி, வித்தியாணி, திருமகள் (நீதி உத்தியோகத்தர் - கல்முனை) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை, காலஞ்சென்ற முருகேசு, மகாலிங்கம், காலஞ்சென்ற பூபாலரெட்ணம், தெய்வானை ஆகியோரின் மைத்துனரும், ருத்திராம்பாள் (ஆசிரியை - உவெஸ்லி உயர்தர பாடசாலை), ஜிதார்த்தனன் (ஆசிரியர் - உவெஸ்லி உயர்தர பாடசாலை) ஆகியோரின் பெரியப்பாவும், சணாதனன், காலஞ்சென்ற ரமணி காலஞ்சென்ற நந்தகுமார், நேசரஞ்சன், சிறிதரன் (அபிவிருத்தி உத்தியோகத்தர் - பிரதேச செயலகம் நாவிதன்வெளி), கவிதா ஆகியோரின் பாசமிகு மாமனாரும், கலாவதி காலஞ்சென்ற கமலநாதன், கமலதாசன், கலாமணி, குணநாதன், சசிகலா, கலைவாணி, கலாராணி, எழில்வேந்தன், எழிலரசி, காலஞ்சென்ற நிர்மோகன் காலஞ்சென்ற பூங்கோதை, அகிலன், தமிழ்மாறன், குபேரன், குலதீபன், நாமகள், கோணேஸ்வரன், கனேஸ்வரன், கமலேஸ்வரன், ஆகியோரின் பாசமிகு தாய்மாமனாரும், காலஞ்சென்ற கவிஞர் கலைக்கொழுந்தனின் ஏகாம்பரம் அவர்களின் உடன்பிறவா சகோதரனும் அகிலோபாவின் அப்பப்பாவும், நிதர்சனா, சர்ஜயன், நிருட்சயன், தயாநிதி, ஹரம்சாயினி, ரஸ்மிகன், ஹம்சத்தினி ஆகியோரின் பாசமிகு அம்மப்பாவும் ஆவார்

அன்னாரின் பூதவுடல் 07.07.2024 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு அன்னாரது இல்லத்திலிருந்து எடுத்து செல்லப்பட்டு பெரியநீலாவணை இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும் இவ் அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல் - குடும்பத்தினர்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நயன நீர் அஞ்சலி

## அமரர்.முருகேசு சடாட்சரம்

கமு/கமு/ பாண்டிருப்பு நாவலர் வித்தியாலயத்தில் கடமையாற்றும்
ஆசிரியை திருமதி. கீர்த்தினி அவர்களின் தந்தை

| விழிமகிழ | | விழிநெகிழ |
|---|---|---|
| 1940 | | 2024 |
| 05 | | 07 |
| 06 | | 06 |



நிந்தனைகள் வந்தபோதும் திடமாக நீ வாழ்ந்து
கலி விளக்காய் பிரகாசித்து விண்ணகம்
விரைந்தது ஏனோ.!

ஊரெல்லாம் உன் சொந்தம் உணர்வுடன் பெருகிடவே
களையாத இன் முகத்துடன் காலமெல்லாம்
இருந்திடவே

காலனவன் விதி முடிய காவு கொண்டு சென்றானோ
மண்ணினுள் புதையுண்ட இரத்தினமும்
புடை போட்டால் தான் மிளிரும்

அதுபோல உங்கள் ஆன்மா ஈசனவன்
திருவடியில் மலர்ந்திருக்க நாளெல்லாம்
நாமும் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், பிரதி அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் கல்விசாரா ஊழியர்கள்
(கமு/கமு/ பாண்டிருப்பு நாவலர் வித்தியாலயம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

பிறப்பு
06 - 05 - 1940

இறப்பு
06 - 07 - 2024



## முருகேசு சடாட்சரம்
(ஓய்வு நிலை உதவிக் கல்விப் பணிப்பாளர்)

கல்முனை நகரில் முனைச் சடாச்சரம்
கவிஞர்கள் வரிசையில் அவர்தான் தமிழ்ப்பழம்
எல்லோரும் மதிக்கும் எங்களூர் கவிச்சுரம்
இயமனோடு போனதால் எமக்கேதினி தமிழ்ப்பதம்.

உண்மையில் அவரோர் ஆசான் ஊர்விட்டுப் பணிசெய்ய நோகார்
எண்ணமே வாழ்வென வாழ்வார் எவரையும் எதற்குமே பேசார்.

இயக்குனராக கடைசிப் பணியினில் இருந்தார்
இலக்கியத்தளங்களில் நற்கவிஞராய் திகழ்ந்தார்
உழைப்பினால் பலரை ஊரினில் உயர்த்தினார்
உண்மையில் உழைப்பினால் அவருமே உயர்ந்தார்.

தமிழன்னை வரமாக எமக்கென்று வந்தவர்
தமக்கென்று இல்லாது தமிழுக்காய் வாழ்ந்தவர்
எமக்கென்று ஊரில் இன்பதுன்பம் சுமந்தவர்
இயமனோடு இன்றுசெல்ல ஏன் நினைத்தவர்.

சரஸ்வதியை வளர்த்த சடாட்சரமையா
சகலகலா வல்லவனாக திகழ்ந்த நீங்களையா
இலக்கியத்தால் இதயம் வென்ற வேந்தரையா
இனி உங்களை எங்கோ நாம்
காண்போம் ஐயா.
உங்களது ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்

*ஓம் சாந்தி...... ஓம் சாந்தி...... ஓம் சாந்தி......*

காவேரி விளையாட்டு கழகம், தடம் சமூக அமைப்பு
பெரியநீலாவணை

KOPIMULTISHOP, MAIN STREET, PERIYANEELAVANAI - [T/P : 0757127846, Whatsapp No : 0753366319]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் காணிக்கை



பிறப்பு 06 - 05 - 1940

இறப்பு 06 - 07 - 2024

## முருகேசு சடாட்சரம்

(ஓய்வு நிலை உதவிக் கல்விப் பணிப்பாளர்)

[illegible]

ஓம் சாந்தி..... ஓம் சாந்தி..... ஓம் சாந்தி.....

வெல்டன் விளையாட்டுக் கழகம்
பெரியநீலாவணை

SOPHIA CITISHOP, MAIN STREET, PERIYANEELAVANAI [illegible]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

பூமியை நாங்கள் பார்க்க
புன்னகையும் பொறுமையும் நிலைத்திருக்க
பூரிப்பாய் எமை போற்றி வளர்த்தீர்கள்
சிந்தையால் உயர்ந்தீர்கள்
பாசமாய் பலருடன் பழகி
நெஞ்சமதில் நிலை கொண்டீர்கள்

எங்கள் அன்புத்தெய்வத்தின் மறைவுச் செய்தியைக் கேட்டு அறிந்து வீடு தேடி உடனே ஓடிவந்து ஆறுதல் கூறி உதவிகள் பல புரிந்த அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் தொலைபேசிகள், முகநூல்கள், வாயிலாகவும் அனுதாபங்கள் தெரிவித்தவர்களுக்கும், பூக்கள், பூமாலைகள், பதாதைகள், மலர்வளையங்கள் வைத்து அஞ்சலி செலுத்திய அன்பு உள்ளங்களுக்கும், மரணச்செய்தி கேட்ட நாளில் இருந்து பல வழிகளிலும் உதவிகள் புரிந்த உற்றார் உறவினர்கள், நண்பர்கள், இறுதிக்கிரியை நடத்திய குரு அவர்களுக்கும், மறைவுச்செய்தியை பிரசுரித்த தமிழன், தினகரன், தினக்குரல், வீரகேசரி, டெய்லி மிரர் பத்திரிகைகளுக்கும், இணையத்தளங்கள், முகநூல்கள், ஒளி ஒலி பரப்புச் சேவைகள் அனைத்திற்கும் இறுதிக்கியை வேளையில் அஞ்சலிக்கூட்டம் வைத்து இரங்கற்பா தெரிவித்த கல்விப் பெருந்தகைகள், கவிஞர்களுக்கும், இம்மலரை இனிதாக அச்சிட்டு வழங்கிய அச்சகத்தினருக்கும். இம் 31ம் நாள் நினைவு மலருக்கு தங்கள் நினைவுகளை எழுத்து மூலம் பகிர்ந்து கொண்டு இருப்பவர்களுக்கும். 06.08.2024 ஆகிய இன்று 31ம் நாள் அந்தியெட்டி கிரியையில் கலந்து கொண்டு சிறப்பிப்போருக்கும் எங்கள் நன்றியை தெரிவித்துக்கொள்கின்றோம்.

- குடும்பத்தினர். -


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
MARUTHAMUNAI
MUNICIPAL COUNCIL
KALMUNAI

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
MARUTHAMUNAI
MUNICIPAL COUNCIL
KALMUNAI

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org